விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 091 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 06 திங்கட்கிழமை (20.03.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## ஐ.எம்.எப் கடன் தராவிட்டால்
# நாடு மீள முடியாது திவாலாகிவிடும்
### அமைச்சர் பந்துல குணவர்த்தன எச்சரிக்கை



(கொழும்பு) சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இலங்கைக்கு கடன் கிடைக்கவில்லை என்றால் நாடு மீள முடியாதளவுக்கு திவாலாகிவிடும் என அமைச்சர் பந்துல குணவர்த்தன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

### இந்தியாவில்
## இலங்கை மீனவர்கள் 6 பேர் கைது

(கொழும்பு)
இலங்கை மீனவர்கள் அறுவர் படகு ஒன்றுடன் நேற்று இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள னர்.
இவர்கள் இலங்கை எல்லையை தாண்டி 15

### வவுனியாவில்
## குளத்திலிருந்து சடலம் மீட்பு

(வவுனியா)
வவுனியாவில் குளத்தில் இருந்து நபர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.
வவுனியாவில் குளத்தின் வான் பகுதியில் சடலம் ஒன்று கிடப்பதை அவதானித்த பொது 15

### கட்சி செயலாளர்களுடன் கலந்துரையாடிய பின்
## உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்
### தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)
அரசியல் கட்சி செயலாளர்களுடனான பேச்சுவார்த்தையை தொடர்ந்து உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்படும்.
உள்ளூராட்சி மன்றத் தேர்தலை சட்டத்தின் பிரகாரம் நடத்த அர்ப்பணிப்புடன் செயற்படுகிறோம் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.
உள்ளூராட்சி 15

### மதுசாராயம் கொடுக்கப்பட்டு
## பதின்ம வயது சிறுமி கூட்டு வன்புணர்வு
### அச்சுவேலி பொலிஸில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)
அச்சுவேலி தென்மூலை பகுதியில் 15 வயது சிறுமி ஒருவர் மதுசாராயம் பருக்கப்பட்டு கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார் என்று நேற்று ஞாயிற்றுக் கிழமை அச்சுவேலி 15

## அதிக வெப்பம்
### மாணவர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)
நாட்டில் நிலவும் அதிகளவான வெப்பநிலை தொடர்பாக சுகாதார அமைச்சு பாடசாலை மாணவர்களுக்கு எச்சரிக்கை அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது.
அதிக வெப்பநிலையுடனான காலநிலையை எதிர்கொள்ளும்போது, வியர்வை மற்றும் உமிழ்நீரை வெளியேற்றுவதால் 15

## உள்ளூராட்சி மன்றங்களின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில்
### ஆளுநர்களுடன் பிரதமர் கலந்துரையாடல்



(கொழும்பு)
உள்ளூராட்சி மன்றங்களின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் ஆளுநர்களுடன் பிரதமர் தினேஷ் குணவர்த்தன கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார். 15

## பாராளுமன்றம் ஊடாக நீதித்துறைக்கு அச்சுறுத்தல்
### ஜே.வி.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)
உயர் நீதிமன்ற நீதிபதிகளை பாராளுமன்ற ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமை குழுவுக்கு அழைத்தால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும்.
நீதித்துறையை அச்சுறுத்தும் செயற்பாடுகள் பாராளுமன்றத்தின் ஊடாக முன்னெடுக்கப்படுகிறது.
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு அப் 15

## இலங்கையை மீட்டுவிட்டேன்
### ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)
நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமாகியுள்ளது. இலங்கையை மீட்டுவிட்டேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
நேற்று முற்பகல் ... 02

### காணி வாங்க அனுப்பிய பணத்தை
## பெண் ஒருவரிடம் கொடுத்து ஏமாந்தவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
காணி வாங்குவதற்காக வெளிநாட்டிலிருந்து மகன் அனுப்பிய பணத்தை பெண் ஒருவருக்கு கொடுத்து ஏமாந்த தந்தை ஒருவர் விபரீத முடிவெடுத்து உயிரிழந்த சம்பவம் ஒன்று யாழில் இடம்பெற்றுள்ளது.
இதில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 65 வயதுடையவரே உயிரிழந்தவராவார்.
குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 24 - 05 - 1933

மறைவு 19 - 03 - 2023

## பொன்னு தியாகராசா (தியாகு)

கோண்டாவில் தில்லையம்பதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னு தியாகராசா அவர்கள் நேற்று (19.03.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னு - தங்கம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான தம்பையா - தங்கச்சியம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற செல்வராணியின் ஆருயிர்க் கணவரும் கெங்கேஸ்வரன், ஞானேஸ்வரன், சிவதர்சினி, விக்கினேஸ்வரன், ஜெகதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராஜினி, சுதாஜினி, ராதிகா, வனிதா ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற சிவபாக்கியம், சொர்ணம்மா, இரத்தினசிங்கம் மற்றும் சுந்தரலிங்கம், ராஜேஸ்வரி, நாகேஸ்வரி பூபதி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் நாகேஸ்வரி, அண்ணாத்துரை, அருமைத்துரை காலஞ்சென்ற உருத்திரன், சந்திரன், ஐயாத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனரும் மதுசங்கர்(லண்டன்), சாயிசங்கர் ஆர்த்திகன், மதுராங்கி, சாயித்தியா, மேதவன், பவிசங்கர், கவியாரணி, சாயினி, சாணுப்பிரியன், தரணிகன், குவேதிகா, நிவேதிகா ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20.03.2023 இன்று திங்கட்கிழமை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
076 636 3378 (C-6192) குடும்பத்தினர்

## இலங்கை...

றில் நடைபெற்ற 32வது இன்டராக்ட் மாவட்ட மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

எரிபொருள், உரம், உணவுத் தட்டுப்பாடு உள்ளிட்ட பல கடுமையான நெருக்கடிகளுடன் கடந்த ஜூலை மாதம் நாட்டைப் பொறுப்பேற்றதையும் ஜனாதிபதி நினைவு கூர்ந்திருந்தார்.

இந்த நாட்டை இனி மீட்க முடியாதென பலர் நினைத்திருந்ததாகவும் ஆனால் கடந்த 7 மாதங்களில் நாட்டில் நிலைமையை மாற்றி பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த தனது அணியால் முடிந்ததாக ரணில் விக்கிரமசிங்க பெருமிதம் வெளியிட்டிருந்தார்.

இலங்கை இனி வங்குரோத்து நாடாக இல்லை என தெரிவித்த ஜனாதிபதி எதிர்வரும் இரண்டு வருடங்களில் அபிவிருத்தியடைந்து வரும் நாட்டை அனைவரும் காண முடியும் என்றும் குறிப்பிட்டார். (ம-7.9)


### சுற்றுலா விசா சம்பந்தமான ஆலோசனைகள்

UK, USA, JAPAN, CANADA ஆகிய நாடுகளுக்கு வேலைவாய்ப்பு விசா தேவைப்படுபவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

Hybrid International Hub (pvt) Ltd Jaffna.

076 250 0098/ 021 222 1265

(C-6190)


# RAVEENS EMC Karaveddy

## Selected for Admission Year 6 -2023

| No | Scholar ship Marks | Name | Total | Rank | School |
|---|---|---|---|---|---|
| 1 | 174 | Rajeswaran Abivarsha | 163 | 1 | Vada Hindu |
| 2 | 160 | Nagulan Renusan | 162 | 2 | J/ Nelliady M.M.T.M |
| 3 | 160 | Sathiyabavananthan Vudsikan | 161 | 3 | J/ Manikka Vid |
| 4 | 159 | Ruban vimalasegr sineja | 157 | 4 | J/V.V.T |
| 5 | 172 | Piragash Aksha | 155 | 5 | Vada Hindu |
| 6 | 165 | Vageesan .Sanvikka | 155 | 5 | J/ Nelliady M.M.T.M |
| 7 | 180 | Gnanaraj Abishan | 151 | 7 | J/ Manikka Vid |
| 8 | 156 | Sureshkumar Laksha | 150 | 8 | J/ Manikka Vid |
| 9 | 166 | Ananthakrishnan Kabisayan | 146 | 9 | Vetharani Vid |
| 10 | 155 | Gnanaraj Abbishana | 141 | 10 | J/ Manikka Vid |
| 11 | 157 | Kugalingam Vihashan | 138 | 11 | Melai puloly Saiva |
| 12 | 157 | Pavalan Akshara | 132 | 12 | J/ Manikka Vid |
| 13 | 157 | Kajendran Kabinath | 132 | 12 | J/ Manikka Vid |
| 14 | 147 | Ragavan Adchayaa | 131 | 14 | Kaddai M.M.T.M.S |
| 15 | 151 | Thinesan Asigan | 129 | 15 | Thunnalai Kasi Vid |
| 16 | 149 | Nanthakumar Brushoththaman | 127 | 16 | J/ Manikka Vid |
| 17 | 151 | Suthakaran Abinash | 122 | 17 | J/ Manikka Vid |
| 18 | 153 | Satheeskumar Harikaran | 120 | 18 | Vada Hindu |
| 19 | 148 | Ramesh Vinjchaiya | 110 | 19 | J/ Manikka Vid |
| 20 | 154 | Sivamathan Amshini | 105 | 20 | J/ Manikka Vid |
| 21 | 142 | Sathaharan Kabisha | 104 | 21 | Siththi Vin Vid |
| 22 | 147 | Gnanachchelvan Kiruthikan | 100 | 22 | J/ Manikka Vid |
| 23 | 127 | Kogilan Babisanan | 100 | 22 | J/ Manikka Vid |
| 24 | 146 | Piratheeban Akshayan | 99 | 24 | Melaipuloly Saiva |
| 25 | 141 | Senthan Arathana | 99 | 24 | Kaddai M.M.T.M.S |
| 26 | 146 | Pushparan Vanujan | 82 | 26 | J/ Manikka Vid |

P.Easwaranathan
Director

(C-6191)

11ம் ஆண்டு நினைவு



மலர்வு 02 - 02 - 1946

உதிர்வு 12 - 02 - 2012

அமரர் சின்னத்துரை கணபதிப்பிள்ளை

13ம் ஆண்டு நினைவு



மலர்வு 30 - 08 - 1982

உதிர்வு 13 - 04 - 2010

திருமதி பிரேமலோஜினி பிரபாகரன்

26ம் ஆண்டு நினைவு



மலர்வு 03 - 05 - 1981

உதிர்வு 08 - 04 - 1997

அமரர் கணபதிப்பிள்ளை பிரதீபன்

கண்ணுக்கு [illegible] நிலையாய்
என்றும் [illegible] - என்றும்
எங்களை வழிநடத்த வணங்குகின்றோம்

(14960)

சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.

உங்கள் நினைவுகளுடன்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள்

# நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் வரும் அபாயம்

## தேர்தல் வன்முறை கண்காணிப்பு மையம்

(கொழும்பு)

**பாராளுமன்றம் மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்களும் நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் வரும் அபாயம் இருப்பதாக தேர்தல் வன்முறை கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ளது.**

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தலை உடனடியாக நடத்தி அந்த சபைகளை மக்கள் பிரதிநிதித்துவ சபைகளாக மாற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

ஆகவே தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருப்பதாக அதன் பிரதம செயற்பாட்டாளர் டி.எம். திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மாகாண சபைத் தேர்தல்கள் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடைபெறாமல் போகும் அபாயம் இருப்பதாக ஜரெஸ் நிறுவனத்தின் தலைவர் மஞ்சுள கஜநாயக்கவும் குறிப்பிட்டுள்ளார். (நி)

## நிதி அமைச்சின் செயலருக்கு எதிராக ஒன்றிணையும் சஜித்-அநுர

(கொழும்பு)

நிதி அமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்தனவுக்கு எதிராக அடுத்த வாரம் வழக்குத் தாக்கல் செய்ய ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகியன தீர்மானித்துள்ளன.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது தொடர்பாக நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு தொடர்பாக அமைச்சின் செயலாளர் நடவடிக்கை எடுக்கத் தவறிய தன் காரணமாகவே இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது.

இதன்படி சஜித் பிரேமதாச மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோரின் தலைமையீட்டில் மகிந்த சிறிவர்தனவுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள்ளன.

உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அமுல்படுத்தாதது நீதிமன்றத்தை அவமதிக்கும் செயலாகும் என இரு கட்சிகளும் சுட்டிக்காட்டுகின்றன. (நி)

### நாட்டின் சில பகுதிகளில் சிறியளவில் நிலநடுக்கங்கள்

(திருமலை)

திருகோணமலை, கோமரன்கடவல மற்றும் கிரிந்த பிரதேசங்களில் சிறியளவில் நில அதிர்வுகள் உணரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை பகுதியில் ரிக்டர் அளவுகோலில் 3.0 அளவில் புவியதிர்வு உணரப்பட்டதாக புவிசரிதவியல் மற்றும் சுரங்க பணியகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கிரிந்த பிரதேசத்தில் உணரப்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 2.6 ஆக பதிவாகியுள்ளதாக பணியகம் குறிப்பிட்டுள்ளது. (நி)

## பொதுத் தேர்தல் நடந்தால் தேசிய மக்கள் சக்தி முன்னிலை பெறும்

### கருத்துக் கணிப்பில் தகவல்

(கொழும்பு)

தற்போதைய நிலையில் பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்படுமாக இருந்தால் தேசிய மக்கள் சக்தி முன் னிலை பெறும் என 2023 பெப்ரவரி மாதத்திற்கான சுகாதாரக் கொள்கை நிறுவனங்கள் நடத்திய கருத்துக்கணிப்பில் தெரியவந்துள்ளது.

கணக்கெடுப்பின்படி, தேசிய மக்கள் சக்தி 43 வீதமான மக்களின் ஆதரவையும் ஐக்கிய மக்கள் சக்தி 30 வீதமான ஆதரவையும் பெறும் எனவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி தலா 4 வீதமான மக்கள் ஆதரவை பெறுமென இந்த கருத்து கணிப்பில் தெரியவந்துள்ளது. (நி)




## பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

**பதிவு இலக்கம்- PA 52-18.03.1972**

### வெளிவாரியாக விண்ணப்பம் கோரல்

மேற்படி சங்கத்தின் பொதுமுகாமையாளர் பதவிக்கு வெளிவாரியாக விண்ணப்பம் கோரப்படுகின்றது. விருப்பம் உள்ளவர்கள் 31.03.2023 ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக **"தலைவர், பொதுமுகாமையாளர் பளை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், கண்டி வீதி பளை"** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் இணைப்புக்களை சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

1. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் :- பிரதி
2. கல்வி தகைமைச் சான்றிதழ் :- பிரதி
3. சேவைத் தகைமைச் சான்றிதழ் :- பிரதி
4. இரு நற்சான்றிதழ் :- பிரதி

1. பதவி குறியீட்டு இல பொது முகாமையாளர் 101/08

சம்பள அளவுத்திட்டம் 20665-260X10-280X10-26065 (02/2022 இற்கு அமைய) (கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இதர படிகளும் வழங்கப்படும்)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

(அ) கூட்டுறவு ஊழியர் 09 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை/மேற்பார்வை நிலை பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை/ மேற்பார்வை நிலை பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டம் /அதற்கு சமமான தகைமை.

(ஆ) இத்தகைமையானது கணக்கியல்/வியாபார புள்ளி விபரவியல்/ வியாபாரக் கற்கைகள் தொடர்பாக பாடங்களை உள்ளடக்கி இருத்தல் வேண்டும்/ இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் கணக்கியல்/முகாமைத்துவம்/வர்த்தகம் தொடர்பான உயர் டிப்ளோமா சித்தி.

அல்லது

(இ) கூட்டுறவு ஊழியர் உயர்தரப்பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமைநிலை பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்/ க.பொ.த உயர்தரப்பத்திர பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலை பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம்.


**[illegible] (தலைவர்)**

**[illegible]தெ.வ.அ.கூ.சங்கம் ,கண்டி வீதி, பளை,**

(சி-6188)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நேபாளத்தில் மீண்டும் கால்பந்துப் போட்டி



நேபாளத்தில் மூன்று ஆண்டுகளுக்கும் மேலான இடைவெளிக்குப் பிறகு, மூத்த ஆண்கள் தேசிய கால்பந்து அணி இந்த மாதம் மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளது.

நேபாளத்தில் நடைபெறும் பிரதமர் கோப்பைக்கான மூன்று நாடுகள் கால்பந்து தொடரில் பங்கேற்பதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

போட்டியின் ஆரம்பத்தில் நாளை மறுதினம் பூட்டான், லாவோஸை எதிர்கொள்கிறது.

பூட்டான் கால்பந்து சம்மேளனத்தின் கூற்றுப்படி, தொற்றுநோய் கடந்த சில ஆண்டுகளாக சர்வதேச போட்டி அல்லது நட்பு ரீதியான போட்டிகளில் விளையாடுவதற்கான வாய்ப்புகளை மூத்த ஆண்கள் தேசிய அணியை இழந்திருந்தது.

இருப்பினும், பூட்டான் லாவோஸ் மற்றும் நேபாளம் ஆகிய அணிகள் தலா இரண்டு முறை மோதும் வகையில் இத்தொடர் அமைக்கப்பட்டுள்ளது.

பூட்டான் தற்போது உலக தரவரிசையில் 185 ஆவது இடத்தில் உள்ளது, நேபாளம் மற்றும் லாவோஸ் முறையே 175 மற்றும் 187 ஆவது இடங்களிலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# தென்மராட்சி கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஆரம்பம்



தென்மராட்சி கிரிக்கெட் லீக் நடத்தும் தென்மராட்சி கழகங்களுக்கு இடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை மட்டுவில் மகா வித்தியாலய மைதானத்தில் ஆரம்பமானது.

தென்மராட்சி கிரிக்கெட் லீக்கின் தலைவர் ம.தர்சன் தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் விருந்தினர்களாக சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர்களான திருக்குமரன் மற்றும் கிசோர் ஆகியோர் கலந்துகொண்டு சுற்றுப்போட்டியினை ஆரம்பித்து வைத்திருந்தனர்.

கிரிக்கெட் விளையாட்டினை ஊக்குவிக்கும் முகமாக தென்மராட்சி லீக்கினால் நடத்தப்படும் மென்பந்து சுற்றுப் போட்டியில் கிண்ணத்தை சுவீகரிக்கும் அணிக்கு ஒரு இலட்சம் ரூபாய் பணப் பரிசும் இரண்டாம் இடத்தை பெறும் அணிக்கு ஐம்பதாயிரம் ரூபாய் பணப் பரிசும் வழங்கி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-30)

# ரிஷப் பண்டை சந்தித்த யுவராஜ்சிங்



ரிஷப் பண்டை இந்திய அணியின் முன்னாள் அதிரடி பட்ஸ்மேனான யுவ ராஜ் சிங், நேரில் சந்தித்துள்ளார். ரிஷப் பண்ட் கிரிக்கெட் விளையாடுவதற்கு ஒரு ஆண்டு ஆகும் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இந்திய கிரிக்கெட் அணியின் இளம் விக்கெட் கீப்பர் ரிஷப் பண்ட் கார் விபத்தில் சிக்கினார். அவர் ஓட்டிச் சென்ற கார் சாலையின் தடுப்பில் மோதி தீப் பிடித்தது. அதிர்ஷ்ட வசமாக காயத்துடன் உயிர் தப்பினார். இதனை தொடர்ந்து பல அறுவை சிகிச்சைகளை செய்து கொண்டு தற்போது ஓய்வு எடுத்து வருகிறார். அவரது உடல் நிலை முன்னேறி வந்தாலும், கிரிக்கெட் விளையாடுவதற்கு ஒரு ஆண்டு ஆகும் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில், ரிஷப் பண்டை இந்திய அணியின் முன்னாள் அதிரடி பட்ஸ்மேனான யுவராஜ் சிங், நேரில் சந்தித்துள்ளார்.

இதனை தொடர்ந்து அவர் தன்னுடைய டுவிட்டரில், இந்த சாம்பியன் மீண்டும் எழப் போகிறார். இவர் எப்போதும் நேர்மறையாகவும் மகிழ்ச்சியுடன் இருக்கிறார். உங்களுக்கு அதிக சக்தி கிடைக்கும் என்று பதிவிட்டுள்ளார். (நி)

# அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் போட்டியில் வெற்றி ஜடேஜா- ராகுலை புகழ்ந்த ஹர்திக் பாண்ட்யா

அவுஸ்திரேலியா அணிக்கு இடையேயான மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் முதலாவது போட்டியானது மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்று முடிந்தது. இந்த போட்டியில் டாஸ் வென்ற இந்திய அணி முதலில் பந்துவீச்சை தீர்மானம் செய்தது.

அதன்படி முதலில் விளையாடிய அவுஸ்திரேலியா அணியானது இந்திய அணியின் சிறப்பான பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் 35.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 188 ஓட்டங்கள் மட்டுமே குவித்தது.

பின்னர் 189 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய இந்திய அணி 39.5 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 191 ஓட்டங்கள் குவித்து வெற்றி பெற்றது.

இந்திய அணி சார்பாக கே.எல் ராகுல் ஆட்டமிழக்காமல் 75 ஓட்டங்களும் ரவீந்திர ஜடேஜா 45 ஓட்டங்களும் குவித்து இந்திய அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றனர். பந்துவீச்சில் இரண்டு விக்கெட்டுகளையும் பட்டிங்கில் 45 ஓட்டங்களையும் குவித்த ரவீந்திர ஜடேஜா ஆட்ட நாயகனாக அறிவிக்கப்பட்டார்.

இந்நிலையில் இந்த வெற்றிக்கு 2 பேர் முக்கிய காரணமாக உள்ளதாக இந்திய அணியின் கப்டன் ஹர்திக் பாண்ட்யா கூறினார். இது குறித்து அவர் கூறியதாவது, இந்த போட்டியின் இரண்டு இன்னிங்ஸ்களிலுமே நாங்கள் அழுத்தத்தை சந்தித்தோம்.





இருந்தாலும் அந்த தருணங்களை சரியாக சுதாகரித்து வெற்றியை நோக்கி பயணித்ததில் மகிழ்ச்சி. உண்மையிலேயே இந்த போட்டியில் நாங்கள் விளையாடிய விதம் மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் உள்ளது.

எங்களுக்கு கிடைத்த வாய்ப்பை சரியாக கையில் எடுத்து வெற்றி பெற்றுள்ளதாக நினைக்கிறேன். பீல்டிங்கின் போது ஜடேஜா மற்றும் சுப்மன் கில் ஆகியோர் மிகச் சிறப்பாக செயல்பட்டனர். அதோடு ஜடேஜாவை பற்றி பேசியே ஆக வேண்டும்.

ஒரு இடைவெளிக்கு பின்னர் மீண்டும் ஒருநாள் கிரிக்கெட்டில் இடம் பிடித்த அவர் தான் எவ்வளவு பெரிய வீரர் என்பதை இந்த போட்டியின் மூலம் காண்பித்துள்ளார்.

இந்த சேசிங்கின் போது சரியான நேரத்தில் நல்ல பாட்னர்ஷிப் தேவைப்பட்டது. அதனை கே.எல் ராகுல் மற்றும் ஜடேஜா ஆகியோர் செய்து காண்பித்தனர். அவர்களது பார்ட்னர்ஷிப் பார்ப்பதற்கு மிகச் சிறப்பாக இருந்தது மட்டுமின்றி எங்களை வெற்றிக்கும் அழைத்துச் சென்றது. மைதானத்தில் நல்ல வெயில் இருந்தது. இந்த போட்டியில் என்னுடைய பட்டிங் மற்றும் பவுலிங் என இரண்டையுமே நான் மகிழ்ச்சியாக வெளிப்படுத்தினேன்.

இறுதியில் கே.எல் ராகுல் மற்றும் ஜடேஜா ஆகியோர் எங்களை வெற்றிக்கு அழைத்துச் சென்றனர். அவர்கள் விளையாடிய விதம் எங்களுக்கு மேலும் நம்பிக்கையை தந்துள்ளது.

ஒரு ஒட்டுமொத்த அணியாக நமது அணியின் செயற்பாட்டினை நினைத்து பெருமை அடைகிறேன். இவ்வாறு கப்டன் ஹர்திக் பாண்ட்யா கூறினார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்காவுக்கு எதிராக போரிட

# 8 லட்சம் இளைஞர்கள் இராணுவத்தில் இணைவு



### வட கொரியா தகவல்

(பியாங்யாங்)

அமெரிக்கா மற்றும் பிற எதிரிகளுக்கு எதிராக போரிட சுமார் 800,000 இளைஞர்கள் இராணுவ சேவைக்கு முன் வந்துள்ளதாக வடகொரியா தெரிவித்துள்ளது.

வட கொரியாவின் எதிரிகளை முற்றிலும் அழித்து இரு கொரியாக்களையும் ஒன்றிணைப்பதாக புதிதாக இணையும் தன்னார்வத் தொண்டர்கள் உறுதியளித்துள்ளதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை அரசு ஏற்பாடு செய்த நிகழ்வுகளில் இராணுவத்தில் சேர்வதற்கு அல்லது மீண்டும் சேர்வதற்கு கையெழுத்திட்டனர்.

நாட்டின் இளைஞர்களின் முன்னணிப் படை என்று வர் ணிக்கப்படும் சுமார் 8 லட்சம் இளைஞர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஒரே நேரத்தில் தாயகத்தைப் பாதுகாக்கும் போரிலும் எதிரியை அழிக்கும் போரிலும் இணைவார்கள் என வட கொரியாவில் நடக்கும் நிகழ்வுகளை கண்காணிக்கும் அந் நாட்டு அரசு செய்தித்தாளான ரோண்டோங்சின்மம் தெரிவித்துள்ளது. (நி)

---

## பங்களாதேஷில்

# பேருந்து விபத்து 17 பேர் உயிரிழப்பு



(டாக்கா)

பங்களாதேஷில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

நெடுஞ்சாலையில் அமைக்கப்பட்டிருந்த வேலியை தகர்த்துக் கொண்டு பேருந்து வீதியோர கால்வாய்க்குள் விழுந்ததில் இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள நெடுஞ்சாலையில் ஏற்பட்டுள்ள இந்த விபத்தில் 17 பேர் உயிரிழந்துள்ளதோடு. 25 பேர் காயமடைந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.(நி)

---

# சூடானில் மர்மப் பொருள் வெடித்து 11 சிறுவர்கள் உயிரிழப்பு

(கார்டூம்)

சூடானில் விளையாட சென்ற இடத்தில் மர்மப் பொருள் வெடித்து 11 சிறுவர்கள் பலியான சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

வட கிழக்கு ஆபிரிக்க நாடான சூடானின் பாகர் அல் ஹசால் மாகாணத்தில் உள்ள ஒரு கிராமத்தில் சிறுவர்கள் விளையாடி கொண்டிருந்தனர்.

அப் போது அங்கு ஒரு மர்ம பொருள் அருகே கிடந்தது. இதனை பார்த்த சிறுவர்கள் அதனை தங்களது கையில் எடுத்து விளையாட ஆரம்பித்தனர்.

அப்போது அந்த மர்ம பொருள் திடீரென பயங்கர சத்தத்துடன் வெடித்துச் சிதறியது. இதனை கேட்ட அக் கம்பக்கத்தினர் அங்கு ஓடி சென்றுபார்த்தனர். அப்போது விளையாடி கொண்டிருந்த சிறுவர்கள் ரத்த வெள்ளத்தில் படுகாயம் அடைந்து கிடந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

இதனையடுத்து அவர்களை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அதில் 11 சிறுவர்கள் செல்லும் வழியிலேயே உயிரிழந்தனர்.

சூடானில் கடந்த 2013 இல் உள்நாட்டு போர் தொடங்கியது. தொடர்ந்து 5 ஆண்டுகள் நீடித்த இந்த போரில் 4 லட்சத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். இந்த காலகட்டத்தில் ஏராளமான வெடிகுண்டுகள் அங்கு வீசப்பட்டன. அந்த வெடிகுண்டுகள் வெடித்து அவ்வப்போது இது போன்ற கொடூர சம்பவங்கள் அரங்கேறி வருவது குறிப்பிடத்தக்கது. (நி)

---

## ரஷ்ய ஆக்கிரமிப்பில் உள்ள மரியுபோலுக்கு

# ஜனாதிபதி புடின் திடீர் விஜயம்



(கீவ்)

கடந்த ஆண்டு மே மாதம் முதல் ரஷ்ய படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள டெனெட்ஸ்க் பகுதியில் உள்ள உக்ரைனிய நகரமான மரியுபோலுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் விஜயம் மேற்கொண்டுள்ளார்.

உக்ரைனிலிருந்து கருங்கடல் தீபகற்பம் இணைக் கப்பட்ட ஒன்பதாவது ஆண்டு நிறைவைக் குறிக் கும் வகையில் ரஷ்ய ஜனாதிபதி கிரிமியாவிற்குச் சென்ற ஒரு நாளுக்குப் பின்னர் இந்த விஜயம் அமைந்துள்ளது.

கருங்கடல் துறைமுக நகரமான செவஸ்டோபோலுக்கு அவர் சென்றதாகவும் அவருடன் மொஸ்கோவால் நியமிக்கப்பட்ட உள்ளூர் ஆளுநரும் பயணம் செய்திருந்ததாகவும் அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

உக்ரைன் மற்றும் சர்வதேச சமூகத்தால் அங்கீகரிக்கப்படாத வாக்கெடுப்பைத் தொடர்ந்து ரஷ்யா 2014 இல் கிரிமியாவை இணைத்துக் கொண்டது.

இருப்பினும் ரஷ்யா ஆக்கிரமித்துள்ள பகுதிகள் மற்றும் தீபகற்பத்தில் இருந்து வெளியேற வேண்டும் என உக்ரைன் ஜனாதிபதி கடந்த ஆண்டு முதல் கோரி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

---

## உக்ரைனுக்கு வழங்கப்படும் போர் விமானங்களை அழிப்போம்

### ரஷ்யா எச்சரிக்கை

(மொஸ்கோ)

உக்ரைனுக்கு நேட்டோவும் ஏனைய நாடுகளும் வழங்கும் போர்விமானங்கள் அழிக்கப்படும் என ரஷ்யா எச்சரித்துள்ளது.

அண்மையில் உக்ரைனுக்கு உதவ 25 MIG-29-ரகப் போர் விமானங்களை வழங்கப்போவதாக போலந்து மற்றும் ஸ்லோவேக்கியா அறிவித்துள்ளன.

இந்நிலையில், ரஷ்யா குறித்த எச்சரிக்கையினை விடுத்துள்ளது.நேட்டோ உக்ரைனுக்கு ஆயுதம் வழங்கினால் அது ரஷ்யப் படையின் தாக்குதலுக்கு இலக்காகும் என கிரேம்ளின் முன்பே எச்சரித்திருக்கின்றது.

போர் விமானங்கள் வேண்டும் என உக்ரைன் தொடர்ந்து வேண்டுகோள் விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(நி)

---

## தெற்கு ஈக்வடாரில் நிலநடுக்கம்

# 13 பேர் உயிரிழப்பு

(வோஷிங்டன்)

தெற்கு ஈக்வடாரில் நேற்று முன்தினம் சக்தி வாய்ந்த நிலநடுக்கமொன்று பதிவாகிய நிலையில் குறைந்தது 13 பேர் இறந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ரிக்டர் அளவுகோலில் 6.8 ஆக இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. இந்த நிலநடுக்கம் தெற்கு நகரமான பாலோவுக்கு அருகில் தாக்கியதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க தேசிய வானிலை சேவையின்படி, அப்பகுதிக்கு சுனாமி எச்சரிக்கை குறித்த எந்தவித தகவலும் வெளியாக வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.கலாசார மண்டபத்தை மாநகர சபையிடமே ஒப்படைப்போம்

## இந்தியத் துணைத்தூதர் ராகேஷ் உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கலாசார மண்டபம் மாநகர சபைக்குரியது.அதனை யாழ்.மாநகரசபையிடமே ஒப்படைப்போம் என இந்தியத் துணை தூதுவர்ராகேஷ் நட்ராஜ் தெரிவித்தார்.

பிரதி முதல்வர் து.ஈசன் உள்ளிட்ட குழுவினர்- இந்திய துணைத் தூதுவர் சந்திப்பு கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்திய துணைத் தூதரகத்தில் இடம் பெற்றது. அச்சந்திப்பின் போது கடந்த பெப்ரவரி மாதம் யாழ். கலாசார மண்டபம் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப் பட்டது.

ஆனால் இன்று வரை அது யாழ்.மாநகர சபையிடம் ஒப்படைக்கப்படவில்லை என பிரதி முதல்வரால் வினவப்பட்ட போதே இந்தியத் துணைத் தூதுவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன் இச் சந்திப்பில் மேலும் பல விடயங்களும் கலந்துரையாடப்பட்டன. (நி)



கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டை யொட்டிய மெய்வல்லுநர் போட்டிகள் அண்மையில் கலாசாலை மைதானத்தில் நடைபெற்றன.

கலாசாலை அதிபர் ச. லலீசன் தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் அ. சிவபால சுந்தரன் பிரதம விருந்தினராகவும் கலாசாலையின் முன்னாள் அதிபர் சிவயோகநாயகி இராமநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். (படங்கள்:-சிவசாந்தன்)

# பல்வேறு திருட்டுகளில் ஈடுபட்ட மூவர் அதிரடியாக கைது

(அராலி)

பல்வேறு திருட்டு சம்பவங்களில் ஈடுபட்ட மூவரை நேற்று முன்தினம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

காங்கேசன்துறை பிராந்திய மாவட்ட குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரியின் தலைமையின் கீழ் இயங்கும் பொலிஸ் குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட மூவரும் 22, 24, 26 வயதுடையவர்கள் என்பதுடன், அவர்கள் வட்டுக்கோட்டை, சங்கானை, நாவற்குழி பகுதியைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அளவெட்டி பகுதியில், நகைகள் மற்றும் தொலைபேசி என்பவற்றை கொள்ளையடித்துச் சென்றமை தொடர்பில் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது தொலைபேசி மற்றும் நகைகள் என்பன மீட்கப் பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப் பட்டனர். அவர்கள் மூவரையும் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி-104)

# நிதி ஏற்பாடுகள் சீரானால் தேர்தல் எந்நேரமும் நடைபெறலாம்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(அராலி)



. நிதி ஏற்பாடுகள் சீரானால் எந்நேரத்திலும் உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடைபெற வாய்ப்புள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரி வித்துள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் சார்பில் உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடும் யாழ்ப்பாணம் மாவட்ட வேட் பாளர்களுடனான கலந்துரை யாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று இடம் பெற்றது.

அப்போது உள்ளூ ராட்சி மன்றங்களின் பத விக்காலம் நிறைவடைவது பற்றி ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (நி-104)

# பசுமை அமைதி விருதுகள் விழா




(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அமைதி விருதுகள் விழா நேற்று முன் தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

பொதுமக்களிடையே சூழற் கல்வியினூடாகச் சூழல் விழிப் புணர்வை ஏற்படுத்தி அவர்களைச் சூழல்பாதுகாப்புச் செயற் பாடுகளில் பங்குபற்றுநர்களாக்கும் நோக்குடன் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் ஆண்டு தோறும் பசுமை அமைதி விருதுகளை வழங்கி வருகிறது. 2022 ஆம் ஆண்டுக்கான விருதுகளை வழங்கும் விழா நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கத்தில் இடம்பெற்றுள்ளது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் கலந்துகொண்டார்.(நி-33)

# இராசிபலன்

20.03.2023
பங்குனி 06, திங்கட்கிழமை
சதுர்த்தசி பின்னிரவு- 1.53 மணிவரை

சதயம் முன்னிரவு 7.27 மணிவரை
சுபநேரம் -12.18-1.48 மணிவரை
இராகுகாலம்-7.48-9.18 மணிவரை

சந்திராஷ்டமம் -
பூசம், ஆயிலியம்

**வளவன்**

**மேஷம்:** எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**ரிஷபம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்:** உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாகப் பார்ப்பர், எதிலும் அவசரத்தைத் தவிர்ப்பது நல்லது, பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**கடகம்:** மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும்.

**சிம்மம்:** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**கன்னி:** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், நிலையான வருமானத்திற்கு வழிவகை செய்யும் எண்ணம் உருவாகும்.

**துலாம்:** புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமை தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** வழிபாட்டில் நம்பிக்கை கூடும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, பயணங்கள் செய்யும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**தனுசு:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறலாம், பாகப் பிரிவினைகள் சுமுகமாக அமையும்,பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**மகரம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், காணமல் போன பொருள் ஒன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு, பண வரவு திருப்தி தரும்.

**கும்பம்:** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், உடல் நலனில் கவனம் தேவை, வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**மீனம்:** செய்தொழிலில் சிறு மாற்றம் செய்யும் எண்ணம் உருவாகும், தூர தேசச் செய்திகள் அனுகூலம் தரும், ஆன்மிகச் சிந்தனை மேலோங்கும் நாள், மனச்சஞ்சலங்கள் சற்று அதிகரிக்கும்.

தீங்கு செய்யாதிருத்தலே நன்மைகளில் எல்லாம் முதன்மை ஆனது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர்
# உயர்திரு.வேல்நாயகம் திருச்சபேசன்
# அவர்களின் மணிவிழா சிறப்பு மலர் -20.03.2023

## பீடாதிபதியின் வாழ்த்துரை



ஒருவருடைய ஓய்வுக்காலத்தின் மகிழ்ச்சியென்பது தனது சேவைக் காலத்தில் ஆற்றிய சேவைகளின் திருப்தியின் அளவிலேயே தங்கியுள்ளது.

திரு.திருச்சபேசன். பன்முக ஆளுமை கொண்ட கல்வியியலாளர் என்பதற்கு அப்பால் தனது அடையாளத்தை தனது ஆற்றல் வெளிப்பாடுகளின் மூலம் நிலை நிறுத்தியவர். எமது கல்லூரியில் சிறிது காலம் சேவையாற்றினாலும் பல உயர்வான சேவைகளை ஆற்றியுள்ளார். வாண்மைத்துவப் பாடங்களில் புலமை பெற்ற இவர் இத்தோடு மட்டும் நின்றுவிடாது இரண்டாம் மொழியான சிங்களத்தைப் போதிப்பதிலும் மொழிபெயர்ப்புச் செய்வதிலும் பின்னிற்பதில்லை.

அந்த வகையில் அவருடைய அறுபதாவது அகவையில் மணிவிழாக் கொண்டாடுதல் சிறப்பானதாகும். வயது காரணமாக இவர் மணிவிழா காண்பினும் இவருடைய சேவை கல்விப் புலத்தின் நலனுக்கு இன்னமும் தேவை என்று கூறி அவரை. நான் வாழ்த்தி சீர்சிறப்பு மிக்க ஆரோக்கியம் மிகு எதிர்கால வாழ்வு பெற இறைவனை வேண்டியும் அவரின் செயற்பாடுகளுக்கெல்லாம் உறுதுணையாகச் செயற்பட்ட அவரது மனைவி. பிள்ளைகள் மற்றும் உறவினர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்துக்களையும் இறையாசிகளையும் கல்லூரிச் சமூகத்தின் சார்பிலும் தனிப்பட்ட ரீதியிலும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு சு.பரமானந்தம், பீடாதிபதி**

## உப பீடாதிபதியின் வாழ்த்துச்செய்தி



திருச்சபேசன் அவர்கள் ஒரு ஆசிரியராக தன் பணியை ஆரம்பித்து நீண்ட "அர்ப்பணிப்பு மிக்க ஆசிரியத்துவம்" மிகுந்த வாழ்க்கையினை ஒரு ஆசிரிய கல்வியியலாளராக உயர்வடைந்து பன்மொழித் திறமையின் மூலம் பல்வேறு பரிணா மங்களில் மிளிர்ந்து பெருமை கொள்பவரே இவர்.

எந்த விடயத்தை எடுத்தாலும் ஆழ்ந்த அறிவினை வெளிக்காட்டும் இவர். வாழ்க்கைத் திறன்களிலும் உயர்நிலைத் திறன்களை வெளிக்காட்டும் ஒரு பன்முக ஆளுமை எனின் மிகையாகாது. பிரதிபலன் இன்றி சேவையாற்றும் அவர் தன்னிடம் கற்கும் மாணவர் மனதில் எளிதாக இடம்பிடித்து அவர்களை கவரும் வித்தை தெரிந்த ஒரு பண்பாளர் ஆவார்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி அவரின் பணி நிறைவுக் காலத்தில் சிறந்த பல்கலைக்கழகமாக அமைந்தது எனின் மிகையாகாது.

அவரின் ஓய்வுக் காலத்தில் சீரும்சிறப்புமாக. சிறந்த ஆரோக்கியத்துடன் வாழ வாழ்த்துகிறேன்.

**திரு.தி.ஜெயகாண்டீபன்,**
**உபபீடாதிபதி.**

## வாழ்த்துரை



திரு.திருச்சபேசன் எமது வலயத்தில் கடமையாற்றிய காலப் பகுதியில் வரணி ஆசிரியர் வள நிலையத்தை இலங்கை கல்வியியலாளர் சேவையைச் சேர்ந்த ஆளணியினர் எவரும் இல்லாத போதும் தனியொருவராகத் திறம்பட நடத்தியவர். உரிய காலப் பகுதியில் ஆசிரியர்களுக்கு வினைத்திறன் தடைகாண் பரீட்சைக்கான செயலமர்வுகளை நடாத்தி இதவடிவங்களை இடையூறின்றிப் பெற்றுக் கொடுத்தவர்.

இவர் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் சமூகப் பணியினைத் தொடர்ந்து புரியும் வல்லமையை இறைவன் இவருக்கு அருள வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

திருவுடைய திருச்சபேச நாமப் பெருந்தகை
திக்கெட்டும் புகழ் பரப்பி சீருடனே வாழ்கவென
பத்துரதன் புத்திரன் போல் பாரினிலே பெயர் விளங்க சித்தி
விநாயகர் பாதம் பணிந்தே வாழ்த்துகின்றேன் வாழியவே!

**த.கிருபாகரன்,**
**தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர்.**

## உப பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி



திரு.திருச்சபேசன் ஆசிரியராக 19.06.1988 இல் பலாங்கொட ஜெய்லனை மத்திய கல்லூரியில் கல்விச் சேவையை தொடங்கிய இவர் முப்பத்து நான்கு ஆண்டுகள் ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர். ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர். கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் எனப் பல படிநிலைகளில் கல்வித்துறை யில் தடம்பதித்துள்ளார். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் மிகக் குறுகிய காலம் சேவையாற்றியுள்ள போதும் மாணவ ஆசிரியர்கள். விரிவுரையாளர்கள் மனங்களில் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளார்.

இவரின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைவதுடன் ஓய்வுக்காலத்திலும் கல்வி உலகிற்கு பல சேவைகளை ஆற்ற வேண்டும் என மனதார வாழ்த்துகின்றேன்.

**த.தவநேசன்,**
**உபபீடாதிபதி (கல்வியும் தரமேம்பாடும்)**



BA, MPhil in Ed, MEd, PGDE (Ment), NDE, Dip in Agri, SP.Tr

பிறப்பிடம் : மட்டுவில், யாழ்ப்பாணம்.
தந்தை : நாகலிங்கம் வேல்நாயகம்
தாய் : சிவக்கொழுந்து வேல்நாயகம்
மனைவி : உமாரதி திருச்சபேசன்
மகன் : கிருபன் திருச்சபேசன்
மகள் : சஞ்சிகா திருச்சபேசன்
மருமகள் : சோபிகா கிருபன்
பேர்த்தி : யுவஸ்திகா கிருபன்
ஆரம்பக்கல்வி - மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி
இடைநிலை - அம்பாறை தமிழ் ம.வி
உயர்கல்வி - சாவகச்சேரி இந்துக் கல்லூரி
பேராதனைப் பல்கலைக்கழகம்- கலைமாணி
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்- முதுதத்துவமாணி
- முதுகல்விமாணி
தேசிய கல்வி நிறுவகம்-பட்டபின் கல்வி டிப்ளோமா

சேவை விபரம்

ஆசிரியர் R/பலாங்கொட ஜெய்வாணி ம.வி -1988.06.19
ஆசிரியர் R/ பலாங்கொட C.C.த.வி -1994.01.01
ஆசிரியர் J/ மட்டுவில் தெற்கு சரஸ்வதி வி. 1995
ஆசிரியர் J/இணுவில் மத்திய கல்லூரி - 1998
விரிவுரையாளர் J/பலாலி ஆசிரியர்கலாசாலை - 2000
முகாமையாளர் - வேலணை ஆசிரிய வாண்மை விருத்தி ம.நிலையம் - 29.05.2003
விரிவுரையாளர் - கோப்பாய் ஆசிரிய கலாசாலை -15.12.2014
முகாமையாளர் வரணி ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையம் - 02.11.2016
விரிவுரையாளர் -யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரி - 2022.01.01

## பதிவாளரின் வாழ்த்துச்செய்தி



மணிவிழா நாயகன் திருவாளர் வே.திருச்சபேசன் (இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை-தரம். III) அவர்களுடன் பழகுவதற்கான சந்தர்ப்பம் கடந்த 01.01.2022 இல் இருந்து கிடைக்கப் பெற்றது. இரண்டாம் மொழித்தேவைக்கான தேடலில் இவரும் பங்காற்றி வருபவர். அந்த வகையில் பல அரச உத்தியோகத்தர்களுக்கு இரண்டாம் மொழி கற்பித்தலுக்கான ஓர் வளவாளராக கடமையாற்றியுள்ளார். இவர் சிறிது காலம் வரை மட்டும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் கடமையாற்றியிருப்பினும் இவரை அறியாதவர்கள் எவரும் இல்லை. சிறந்த பண்பாளன். எவருடனும் இலகுவில் பழகிக் கொள்வதில் வல்லவர். நல்லவர். இவரை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**இரா.அருள்நேசன்**
**பதிவாளர்,**

## A Noble Educator



Mr.V.Thiruchabesan, is holding Sri Lanka Teacher Educator Service, Lecturer of Jaffna National College of Education is celebrating his 60 th birth day. He previously served as the Manager of Teacher Center, Varany. He was a Lecturer of Palaly Teachers' College when I was also a lecturer there. He was an Agriculture Diploma holder from Kundasale, Kandy. He was an Agriculture Teacher. He has been contributing various education services from different sphere.

Mr.V.Thiruchabesan as a lecturer or mentor is responsible for shaping the lives of the nation's students, and he devotes his lives selflessly to this noble duty. He unquestionably has an impact on his students' lives because he helped them to achieve their goals and dreams by offering support and encouragement. We must recognize and thank him for his outstanding service to the society, especially as he retires from his noble profession. Here are some heartfelt words to honor a retiring educator and thank him for his dedication.

Congratulations on your retirement, dear friend! Best wishes for your retirement!

**T.John Quintus**
**Provincial Director of Education,**
**Provincial Department of Education,**
**Northern Province.**

## பன்முக ஆளுமை



ஏறத்தாழ நான்கு தசாப்த காலம் தமிழ்க் கல்விச் சமூகத்திற்கு கல்வியியலாளர் திரு.திருச்சபேசன் அவர்கள் அளப்பரிய சேவையாற்றியுள்ளார். அவரிடம் இருக்கும் தகவல் தொழில்நுட்ப அறிவு மற்றும் சிங்கள மொழியாற்றல் காரணமாக தான் சேவையாற்றிய இடங்களில் தனித்துவம் மிக்கவராகவும் மிகவும் பெறுமதி மிக்க வளவாளராகவும் விளங்கினார். முழு நிலைத்தர முகாமைத்துவம் தொடர்பாக தனது கல்வி முதுதத்துவமாணிப் பட்டத்திற்கான மிகச் சிறந்த ஆய்வை மேற்கொண்டு பாராட்டைப் பெற்றிருந்தார். தான் சேவையாற்றிய இடங்களில் தனது செலவில் பல அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டமை பாராட்டப்பட வேண்டிய தாகும். பல ஆயிரம் அரச உத்தியோகத்தர்கள் சிங்கள மொழியில் தகைமை பெற வழிகாட்டியாக செயற்பட்டிரு ந்தார். இவரின் ஓய்வுக்காலம் சிறக்க மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**S.R. சத்தியேந்திரம்பிள்ளை,**
**உப பீடாதிபதி (தொடருறுகல்வி)**

## பல்துறை விற்பன்னனுக்கு வாழ்த்துக்கள்



திருச்சபேசன் அவர்களின் எளிமையான தோற்றம். அறிவுபூர்வமான செயற்பாடுகள். மாணவரிடம் காட்டும் கண்டிப்பு. உடன் பணிபுரிவோரிடமும் சமூகத்தோடும் இருக்க வேண்டிய நட்புறவு என்பன அவரிடம் காணப்படும் நற்பண்புகள் ஆகும்.

"வாழ்க்கை கற்றுக் கொடுக்கும். ஆனால் அனுபவம் கற்றுக் கொள்ளாததையும் பெற்றுக் கொடுக்கும்" என்பதற்கிணங்க வாழ்ந்த இவர் ஆசிரியராக. ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளராக. விரிவுரையாளராக எனப் பல துறைகளில் மிளிர்ந்த திரு.வேல்நாயகம் திருச்சபேசன் அவர்கள் காலத்தின் கட்டாயத்தால் சேவையை நிறைவு செய்தாலும் அவரின் ஓய்வுக்காலம் சீருடனும் சிறப்புடனும் அமையவும் அவர் பல்லாண்டு காலம் வாழ்ந்து கல்விக்கும் சமூகத்திற்கும் பணி செய்யவும் எல்லாம் வல்ல வித்தக விநாயகரையும் முடிமன்னர் வைரவரையும் பிரார்த்திக்கிறேன்.

**அருணாசலம் குகன், உபபீடாதிபதி,**
**(தொடருறு கல்வி - நிறுவன அபிவிருத்தி)**

## மணிவிழா வாழ்த்து

கல்லூரித் தாயை கவின் நிலைப்படுத்தும் அணிகலன்களில் இருந்து மற்றுமோர் முத்து. இன்று மணி விழாக் காண்கின்றது. இலங்கையின் கல்விப் புலத்திற்கு பல்வேறு நிலைகளில் பங்களிப்புச் செய்தவர் கல்வியியலாளர் வேல்நாயகம் திருச்சபேசன் அவர்கள்.

ஆசிரியராக தனது பணியை ஆரம்பித்த இவர். ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளராக இலங்கைப் பாடசாலை மேம்பாட்டு வேலைத்திட்டங்களில் தேசிய மட்ட வளவாளராக இணைந்து பல்வேறு பணிகளை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளார்.

முன்மொழிப் புலமையுடனும் நுட்பமான. தீர்க்கமான துறைசார் அறிவுடனும் யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரி திறம்பட தமது பணியை ஆற்றி ஓய்வு பெறும் இந்நாளில் அவரது சேவைக்கு தலை சாய்த்து வணங்கி நிற்பதோடு ஓய்வுக்காலம் சிறப்புற இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

**ஆசிரிய கல்வியியலாளர் கழகம்,**

(14956)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பான மற்றும் முறையான புலம்பெயர்வின்



சிறுவயதில் ஒரு விமானம் பறக்கும் சத்தம் கேட்டவுடனேயே ஓடிவந்து அதற்கு கையசைத்த ஞாபகம் உங்களுக்கு இருக்கக் கூடும். அவ்வாறு கையசைக்கும் போது என்றாவது அவ்வாறானதொரு விமானத்தில் ஏறி வெளிநாட்டிற்கு பயணிக்க வேண்டும் என நீங்கள் கனவு கண்டிருக்கக்கூடும். அவ்வாறு கனவுலகில் தொடங்கிய உங்களது எண்ணத்தின் காரணமாக வெளிநாட்டிற்கு புலம்பெயர்வதற்கான எதிர்பார்ப்பில் நீங்கள் இருப்பீரகளாயின் இக்கட்டுரைத் தொடர் உங்களுக்கானதே.

தேச எல்லைகள் ஊடாக இடம்பெறும் புலம்பெயர்வானது தொழிலுக்காக, கல்விக்காக, சுற்றுலாவுக்காக, சுகாதார வசதிகளுக்காக, நிரந்தரமாக குடியேறுவதற்காக அல்லது வேறு ஏதேனும் காரணங்களுக்காக இடம் பெறக்கூடும்.

இந்தக் கட்டுரைத் தொடர் ஊடாக நாம் எதிர்பார்ப்பது யாதெனில் வேலைவாய்ப்புக்காக புலம்பெயர்பவர்களுக்கு தேவையான முக்கியமான தகவல்களை வழங்குவதாகும். இந்தக் கட்டுரையுடன் தொடர்புடையதாக மார்ச் மாதம் 19 ஆம் திகதி பிரசுரமாகிய கட்டுரையின் ஊடாக வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்லுதல் தொடர்பான பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. அக்கட்டுரையுடன் தொடர்புடைய மற்றும் சில விடயங்கள் இக்கட்டுரையின் ஊடாக கலந்துரையாடப்படுகின்றன.

## புலம்பெயர்வதற்கு முன்னர்

### 1. வெளிநாட்டுக்கு செல்வதற்கு முன்னர் நீங்கள் ஏற்பாடு செய்து கொள்ளவேண்டிய ஆவணங்கள் யாவை?

இலஇலங்கை பிரசையாகிய எந்தவொரு நபரும் வெளிநாட்டுக்கு புலம்பெயர முடியும். ஆயினும், புலம்பெயர்வதற்கு முன்னர் நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டிய சில ஆவணங்கள் உள்ளன.

இலங்கையின் எல்லையை கடப்பதற்கு இலங்கை அரசின் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினால் விநியோகிக்கப்படுகின்ற ஒரு கடவுச்சீட்டை நீங்கள் கட்டாயமாக வைத்திருத்தல் வேண்டும்.

**எனக்கு கடவுச் சீட்டுக்கான விண்ணப்பப்படிவம் ஒன்றை எங்கிருந்து பெற்றுக் கொள்ள முடியும்?**

வெளிநாட்டு கடவுச் சீட்டுக்கான விண்ணப்பப்படிவம் ஒன்றை குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் இணையத்தளத்திலும் **(http://www.immigration.gov.lk/web/images/stories/pdf/form/passport/passport_application.pdf)** கீழே குறிப்பிடப்படுகின்ற இடங்களிலும் பெற்றுக்கொள்ளமுடியும்.

- குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் தலைமை அலுவலகம், கொழும்பு
- கண்டி, மாத்தறை, வவுனியா குருநாகல் பிராந்திய அலுவலகங்கள்



**எனது விண்ணப்பப்படிவத்தை நான் எங்கே சமர்ப்பிக்க வேண்டும்?**

- குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் தலைமை அலுவலகம், கொழும்பு
- கண்டி, மாத்தறை, வவுனியா

**அனைத்து நாடுகளுக்குமான வெளிநாட்டு கடவுச்சீட்டினை வழங்குவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்?**

- சாதாரண சேவை - 14 நாட்களுக்குள்
- அவசர சேவை - ஒரே நாளில் (அதே நாளில்)

**அனைத்து நாடுகளுக்குமான வெளிநாட்டு கடவுச் சீட்டுக்கான தயாரிப்பு கட்டணம் எவ்வளவு?**

- சாதாரண சேவை - ரூ. 5,000.00
- அவசர சேவை - ரூ. 20,000.00

**பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் யாவை?**

1. சுயவிவரப் பக்கத்தின் நிழற்படிவத்துடன் தற்போதைய வெளிநாட்டு கடவுச்சீட்டு (உங்களிடம் இருப்பின்)
2. புகைப்பட நிலையத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு
3. நாடு முழுவதும் அமைந்துள்ள அங்கீகாரம் பெற்ற புகைப்பட நிலையம் ஒன்றிலிருந்து அல்லது திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் அல்லது பிராந்திய அலுவலகங்களில் அமைந்துள்ள புகைப்பட நிலையங்களிலிருந்து புகைப்படங்கள் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.
4. அச்சிடப்பட்ட புகைப்படங்கள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை
5. விண்ணப்பதாரியின் பிறப்புச் சான்றிதழின் மூலப்பிரதி மற்றும் ஒரு நிழற்பிரதி
6. விண்ணப்பதாரரின் தேசிய அடையாள அட்டை மற்றும் ஒரு நிழற்பிரதி
7. தேவையான சந்தர்ப்பங்களில் திருமணச் சான்றிதழ் மற்றும் அதன் நிழற்பிரதி (திருமணத்தின் பின்னரான பெயரை உறுதி செய்துகொள்வதற்காக)
8. தொழிலுக்கு ஏதுவான சான்றிதழ் மற்றும் உங்கள் சேவையை உறுதி செய்து கொள்வதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு ஆவணம் மற்றும் அதன் நிழற்பிரதி



இலங்கையில் இருந்து வெளியேறுவதற்கு மேலதிகமாக வெளிநாடு ஒன்றினுள் நுழைவதற்கும் உங்களுக்கு அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். அத்தகைய அனுமதிப்பத்திரம் வீசா என அழைக்கப்படுவதுடன் ஒவ்வொரு நாட்டிற்குமான வீசா அனுமதிப்பத்திரம் தொடர்பான சட்டங்கள் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன. நீங்கள் சென்றடையும் நாட்டிற்குரியதாக இந்நாட்டில் அமைந்துள்ள தூதரகத்திலிருந்து மேற்படி நாட்டிற்கான வீசா வசதிகளை பெற்றுக்கொள்வதுடன் தொடர்புடைய விவரங்களை பெற்றுக்கொள்ளமுடியும்.

பல்வேறு வகையான வீசா அனுமதிப் பத்திரங்கள் உள்ளதுடன் வர்த்தக வீசா, தொழில் வீசா, சுற்றுலா வீசா ஆகியவை பொதுவாக காணக்கூடிய வீசா வகைகள் ஆகும். மேலும், நாட்டுக்கு உள்நுழையும் அடிப்படையில் பின்வருமாறு வீசா வகைப்படுத்தப்படுகிறது.

- தனி நுழைவு வீசா: இந்த வீசாவின் செல்லுபடியாகும் காலத்திற்குள் உங்களுக்கு ஒரு தடவை மாத்திரம் சம்பந்தப்பட்ட நாட்டிற்குள் நுழைவதற்கு அனுமதி கிடைக்கும்.
- பல்நுழைவு வீசா: இந்த வீசாவின் செல்லுபடியாகும் காலத்துக்குள் உங்களுக்கு பலதடவைகள் சம்பந்தப்பட்ட நாட்டுக்குள் நுழைவதற்கு அனுமதி கிடைக்கின்றது.

### 2. வெளிநாட்டு வேலை வாய்ப்புடன் தொடர்புடைய வகையில் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் உங்கள் பிரதேசத்தில் இருக்கின்றார்கள் என்பதை நீங்கள் அறிவீர்களா?



அரச மட்டத்தில் செயற்படுவதற்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அமைக்கப்பட்டுள்ளதற்கு மேலதிகமாக பிரதேச மட்டத்தில் புலம்பெயர் ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கீழ் நியமனம் பெற்றுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (**Foreign Employment Development Officers**) பணியாற்றுகின்றனர்.

இந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாக உங்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான புலம்பெயர்வின் ஆரம்பம் முதல் புலம்பெயர்வு முடிவடையும் வரை அனைத்துக் கட்டங்களிலும் ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு புலம்பெயர்வதற்கு தேவையான இற்றைப்படுத்தப்பட்ட அனைத்து தகவல்களும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.

ஒரு குடும்பத்தில் தாய் இல்லாத போது பிள்ளைகள் மத்தியில் ஏற்படும் பாதகமான சமூக கிரயத்தை மேற்கோள்காட்டி இலங்கை அரசாங்கம் 2013ஆம் ஆண்டில் ஐந்து வயதை விட குறைந்த வயதுடைய பிள்ளைகள் உள்ள தாய்மார் வெளிநாட்டிற்கு தொழிலுக்காக செல்வதை தடை செய்தது. அண்மைக்கால மாற்றங்களின் அடிப்படையில் அவ்வறிக்கை மீளாய்வுக்கு உற்படுத்தப்பட்டுள்ளது. அதன் நோக்கங்கள் பின்வருமாறு

- 2 வயதுக்கும் குறைந்த பிள்ளைகள் உள்ள தாய்மார் தொழிலுக்காக வெளிநாடுகளுக்கு செல்வதில்லை என்பதை உறுதிப்படுத்துதல்

- உரிய பாதுகாவலர் ஒருவரை நியமிப்பதன் ஊடாக ஐந்து வயதைக் கடந்த பிள்ளைகளின் நல்வாழ்வினை உறுதிப்படுத்துதல்



ஆயினும் 2022ஆம் ஆண்டு 05 வயதுக்கும் குறைந்த பிள்ளைகளைக் கொண்ட பெண்கள் வெளிநாட்டுக்கு செல்வதற்கு இடமளிக்காததால் பல்வேறு முறைகேடான வழிமுறைகள் ஊடாக பெண்கள் வெளிநாட்டுக்குச் செல்வதால் பணியகத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக விசேட அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்படி சட்டம் 02 வயதுக்குட்பட்ட பிள்ளைகளை மாத்திரம் உள்ளடக்கும் வகையில் திருத்தப்பட்டது. இதற்கமைவாக 02 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் உள்ள பெண்கள் வெளிநாட்டிற்கு செல்லுதல் தடைசெய்யப்பட்டதுடன் பெண்கள் வெளிநாடுகளுக்கு செல்லுவம் போது பிள்ளைகளின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கு சிறுவர் பாதுகாப்பு அறிக்கையொன்று சம்பந்தப்பட்ட பிரதேசத்தின் பிரதேச செயலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தரின் கண்காணிப்பின் கீழ் வழங்கப்பட்டது.

இதற்கமைவாக 45 வயதுக்குட்பட்ட பெண்கள் வெளிநாட்டிற்கு செல்வதற்கு முன்னர் பெற்றுக்கொள்ள வேண்டிய குடும்ப பின்னணி அறிக்கைக்கு பதிலாக சிறுவர் பாதுகாப்ப அறிக்கையொன்று 2022 ஜுலை மாதம் முதல் வெளிநாட்டு வேலைவாய்ப்பினை எதிர்பார்த்திருக்கும் பெண்களுக்கு வழங்கப்படுகின்றது.

சிறுவர் பாதுகாப்பு அறிக்கையொன்று தேவைப்படும் புலம்பெயர் ஊழியர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடமிருந்து அதனைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

புலம்பெயர்பவர்கள் இந்நாட்டில் இருந்து புறப்பட்ட பின்னர் இலங்கையுடன் தொடர்பு கொள்ளுகின்ற உத்தியோகபூர்வ வழிமுறை அந்நாட்டில் அமைந்துள்ள இலங்கை தூதரகம் ஆகும். மேற்படி தூதரகங்களில் புலம்பெயர்ந்தவர்களின் வசதி மற்றும் உதவிக்காக தொழில் மற்றும் நலன்புரி பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

புலம்பெயர் ஊழியர்களுக்கு ஏதேனும் தனிப்பட்ட ஆபத்து அல்லது தொழில் புரியும் இடத்தில் ஏற்படும் பிரச்சினைமிக்க சந்தர்ப்பங்களின் போது ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக்கொள்ளக்கூடிய, ஒவ்வொரு நாட்டிற்குரிய தூதரகங்களினாலும் பேணி வரப்படும் மேற்படி தொழில் மற்றும் நலன்புரி பிரிவுகளின் தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.



## புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு

புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு (**International Organization for Migration**) என்பது ஐக்கிய நாடுகளின் புலம்பெயர்வுக்கான முதன்மையான சர்வதேச அமைப்பாகும்.

அதன் முக்கிய குறிக்கோள் யாதெனில் பாதுகாப்பானதும் முறையானதுமான புலம்பெயர்வினை ஊக்குவிப்பதாகவும். இதற்கு நாடளாவிய ரீதியில் பல்வேறு செயலமர்வுகளை நடாத்தி சமுதாயத்தை விழிப்புணர்வூட்டுவதற்கு அவ்வமைப்பின் உதவிக்கான பிரிவு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. மேற்படி செயலமர்வுகளில் புலம்பெயர்வினை பாதுகாப்பான முறையிலும் ஒழுங்கு முறையாகவும் எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பதைப்பற்றி புலம்பெயர்பவர்களுக்கு சரியானதும் இற்றைப்படுத்தப்பட்டதுமான தகவல்கள் வழங்கப்படுகின்றன.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு அப் பிரிவினால் பேணி வரப்படும் 077-4410086 தொலைபேசி இலக்கத்தின் வாயிலாக தொடர்பு கொள்ள முடியும்.

பாதுகாப்பானதும் ஒழுங்கு முறையானதுமான புலம்பெயர்வின் மூலம் தனி நபர்களுக்கும் ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனும் கோட்பாட்டை புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு ஏற்றுக்கொள்கின்றது.

இன்றைய கட்டுரை கட்டாயமாக உங்களுக்கு பயனுடையதாக இருந்திருக்கும் என நம்புகின்றோம். கீழேயுள்ள பெட்டியில் கேட்கப்பட்டிருக்கும் வினாவுக்கான விடைய்யை **SMS** முறையில் தரப்பட்டுள்ள தொலைபேசி எண்ணுக்கு அனுப்பி வைப்பதன் மூலம் சீட்டிழுப்பு முறையில் தெரிவு செய்யப்படுகின்ற வெற்றியாளர்களுக்கு தொலைபேசி முற்கட்டண (ரீலோட்) அட்டைகளை வெற்றி பெற முடியும். தெரிவு செய்யப்படுகின்ற வெற்றியாளர்களுக்கு தொலைபேசி மூலம் அது தொடர்பாக அறிவிக்கப்படும்.

வெளிநாட்டிற்கு செல்லுதல் தொடர்பாக அல்லது ஒழுங்கற்ற பயணத்தின் ஊடாக இன்னலுக்கு உள்ளாகியுள்ள நபர்கள் தொடர்பான நிவாரண நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருப்பின் 0774410086 தொலைபேசி இலக்கம் வாயிலாக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலம் ஒரு சிறந்த எதிர்காலம்



ගොඩ යන්න, හරි පාරෙන් රට යන්න
சரியான வெளிநாட்டு வழி வெற்றிக்கான வழி

| வெளிநாட்டு தூதரகம் | சம்பந்தப்பட்ட தூதரகத்தின் தொழில் மற்றும் நலன்புரி பிரிவின் தொலைபேசி இலக்கம் | வெளிநாட்டு தூதரகத்தின் மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|
| ஐக்கிய அரபு இராஜ்சியம் - அபுதாபி | 00-971-2-6316444 | slemb.abudhabi@mfa.gov.lk |
| பஹ்ரைன் | 00-973-17008410/ 17660408 | slemb.bahrain@mfa.gov.lk |
| ஐக்கிய அரபு இராஜ்சியம் - துபாய் | 00-971-43986535 | condubai@slcgdxb.ae |
| இஸ்ரேல் | 00-972-35277635/8 | slemb.telaviv@mfa.gov.lk |
| ஜோர்தான் | 00-962-65820611/2 | slemb.amman@mfa.gov.lk |
| ஜித்தா - சவுதி அரேபியா | 00-966-126065414/ 6063442/6065772 | slcg.jeddah@mfa.gov.lk |
| குவைத் | 00-965-25339140/42, 25354633/36/38/11 | slemb.kuwait@mfa.gov.lk |
| லெபனான் | 00-961-5769585<br>00-961-5766294 | slemb.beirut@mfa.gov.lk |
| மலேசியா | 00-60-3-42568987, 42571394 | slhc.kl@mfa.gov.lk<br>slhcmy@gmail.com |
| மாலைத்தீவு | 00-960-3322845/ 3313546 | slhc.male@mfa.gov.lk |
| ஓமான் | 00-968-24697841/24697842 | slemb.muscat@mfa.gov.lk<br>emb.omans@gmail.com |
| கட்டார் | 00-974-44677627/647 | slemb.doha@mfa.gov.lk |
| ரியாத் - சவுதி அரேபியா | 00-966-114608232/5 | slemb.riyadh@mfa.gov.lk |
| கொரியா | 00-82-27352966/7 | mission@slembkr.org |
| சிங்கப்பூர் | 00-65-62544595/6/7 | slhcs@lanka.com.sg |



## 3. முறையற்ற புலம்பெயர்வு என்றால் என்ன?

புலம்பெயர்வு செயன்முறையுடன் தொடர்புடைய ஒழுங்கு விதிகளை உரிய முறையில் பின்பற்றாமல் முறையற்ற வழிமுறைகளில் பிற நாடுகளுக்கு நுழைவதற்கு முயற்சி செய்தல் முறையற்ற புலம்பெயர்வாகும். இது போலியான ஆவணங்களை தயாரித்தல் முதல் ஆட்களை சட்டவிரோதமான முறையில் தேச எல்லைகளை கடக்கச் செய்தல் வரை விரிவடைந்துள்ளது.

இவ்வாறான முறையற்ற புலம்பெயர்பவர்கள் ஆட்கடத்தல், மனித விற்பனை அல்லது சென்றடையும் நாட்டின் சட்டங்கள் ஆகியவற்றில் சிக்கிக் கொள்வதால் தண்ட பணத்திற்கு அல்லது சிறைத்தண்டனைக்கு உட்படக்கூடும்.

உரிய தகைமைகள் இல்லாத அல்லது சரியான தகவல்களை அடைந்துகொள்ள இயலாத ஆட்களும் முறையற்ற விதத்தில் நாட்டின் எல்லைகளை கடந்த பிற முறையற்ற புலம்பெயர்ந்தவர்களும் தங்களது தற்போதைய சிறந்த பொருளாதார நிலைமையை உதாரணமாகக் காட்டிய சிலரினால் ஏமாற்றப்பட்ட ஆட்களும் வெளிநாட்டு தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்பில் அத்தகைய ஆட்கடத்தல்காரர்களுக்கு இரையாகக் கூடும். வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெற்றுத்தருவதாக வாக்குறுதியளித்து மனித விற்பனையாளர்கள் ஆட்களை இலகுவாக தமது இரையாக மாற்றிக் கொள்வதற்கு மேற்படி போலியான முகவர்களுக்கு முடியுமாக இருப்பதற்கான காரணம் மக்களிடையில் விழிப்புணர்வு குறைவாக இருப்பதனால் ஆகும்.

ஆட்கடத்தல் (Human Smuggling) மற்றும் மனித விற்பனை (Human Trafficking) உலகில் பல்வேறு நாடுகளில் அவற்றின் சட்ட முறைமையின் ஊடாக தண்டனைக்குரிய ஒரு குற்றமாக இனங்காணப்பட்டுள்ளது. முறையற்ற புலம்பெயர்வு இலங்கையின் குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழும் தண்டனைக்குரிய ஒரு குற்றமாகும்.

"சாதாரண சேவையின் கீழ் வெளிநாட்டு கடவுச்சீட்டுக்காக விண்ணப்பிக்கும் ஒருவர் தற்போது செலுத்த வேண்டிய கட்டணம் எவ்வளவு?"

இவ் வினாவுக்கான விடையை பின்வரும் முறையில் புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பின் (IOM) நேரடி தொலைபேசி இலக்கம் 0774410086 இற்கு SMS (குறுஞ்செய்தி) வாயிலாக மார்ச் மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைப்பதன் மூலம் தொலைபேசி முற்கட்டண அட்டைகளை (ரீலோட்) சீட்டிழுப்பு முறையில் வெற்றி பெறலாம்.

SMS / குறுஞ்செய்தி அனுப்பி வைக்கப்பட வேண்டிய முறை

செய்தி / பால் / வயது / மாவட்டம் / விடை .............................. 0774410086

உதாரணம்
News/ M/ 14/ Colombo/ Answer
News / ஆண் / 14 / கொழும்பு / சரியான விடை

SLBFE (C-1952)

IOM UN MIGRATION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதாரம் தொடர்ந்து வீழ்ச்சியை சந்திக்கும்

## நிபுணர்கள் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**நடப்பு ஆண்டிலும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் வீழ்ச்சியே ஏற்படும் என்று பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.**

பொருளாதார ஆய்வுகளை மேற்கொள்ளும் அட்வகோட்டா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி தனநாத் பெர்னாண்டோ இது தொடர்பான எதிர்வுகூறல் ஒன்றை முன்வைத்துள்ளார்.

கடந்த வருடத்தில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியில் 7 வீதம் மற்றும் 8 வீதம் வீழ்ச்சியடைந்துள்ளதைக் காணமுடிகிறது. அந்த வகையில், இந்த வருடமும் பொருளாதார வளர்ச்சி மேலும் 3 எதிர்மறை புள்ளிகளால் குறைவதற்கான வாய்ப்புகள் உள்ளது என்றும் அவர் கணித்துள்ளார்.

இவ்வாறான நிலைமைகள் காரணமாக பொதுமக்கள் தங்களை அறியாமலேயே வறுமையில் தள்ளப்பட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

## டொலர் நெருக்கடி முடிவுக்கு வந்துவிட்டது

### மத்திய வங்கி ஆளுநர்



(கொழும்பு)

டொலர் நெருக்கடி முடிவுக்கு வந்துவிட்டது என மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

டொலர் நெருக்கடி முடிவுக்கு வந்துவிட்டது என தெரிவித்துள்ள நந்தலால் வீரசிங்க தேவையான துறைகளுக்கு செலவிடுவதற்கு போதுமான அளவு டொலர் எம் வசம் உள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இன்று சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை அனுமதியளிக்கும். இலங்கைக்கான நிதி உதவி கிடைத்த பின்னர் முதலீட்டாளர்களின் ஆர்வம் அதிகரிக்கும் என தெரிவித்துள்ள மத்திய வங்கி ஆளுநர் இதன் காரணமாக மேலும் நிதியும் முதலீடும் கிடைக்கும் எனவும் தெரிவித்துள்ளார். (நி)

## இலங்கை வந்தடைந்த மூன்று நிலக்கரிக் கப்பல்கள்

(கொழும்பு)

நுரைச்சோலை அனல் மின்நிலைய செயற்பாடுகளுக்காகத் தருவிக்கப்பட்ட நிலக்கரியை ஏற்றிக் கொண்டு மேலும் 3 நிலக்கரி கப்பல்கள் இலங்கையை வந்தடைந்துள்ளன. அதன்படி, புத்தளத்தை வந்தடைந்த 17, 18, 19 ஆகிய நிலக்கரி கப்பல்களை இறக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஒரு கப்பலில் 60,000 மெற்றிக் தொன் நிலக்கரிகள் உள்ளன. இந்த நிலக்கரி கையிருப்புகளை மின் உற்பத்தி நிலையங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக இலங்கை நிலக்கரி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன் மூலம் தொடர்ச்சியான மின் விநியோகத்தை மேற்கொள்ள முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2788

விதுனா




மாதங்கி




திலானி




தர்சிகன்




யாதவன்




சிவராம்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிபொருள் விற்பனையில் பாரிய வீழ்ச்சி பதிவாகியது

(கொழும்பு)

இலங்கையில் தொடர்ந்து எரிபொருள் விற்பனை குறைந்து வருவதால், பெற்றோல் நிலையங்களின் மாதாந்திர வருமானம் பாரிய வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்த வருமானம் 30 சதவீதம் முதல் 40 சதவீதம் வரை குறைந்துள்ளதாக எண்ணெய் பிரிப்பாளர்கள் சங்கத்தின் இணைச் செயலாளர் கபில தெரிவித்துள்ளார்.

முன்னர் பெற்றோல் நிலையங்களுக்கு கொண்டு வரப்படும் எண்ணெய் இருப்பு ஓரிரு நாட்களில் தீர்ந்துவிடும். ஆனால் தற்போது அதற்கு மூன்று முதல் நான்கு நாட்கள் ஆகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதனால், எரிபொருள் நிலையை உரிமையாளர்கள் அதிக வங்கி வட்டி செலுத்த வேண்டியுள்ளது. இதன் காரணமாக எதிர்காலத்தில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்கள் சிலர் பணி நீக்கம் செய்யப்படலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை உயர்வு மற்றும், அரசாங்கம் அறிமுகப்படுத்திய கியூ.ஆர் குறியீடு ஆகியவை எண்ணெய் விற்பனையை குறைத்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (நி)

## அன்னை பூபதியின் நினைவு தினம் அனுஷ்டிப்பு



(மட்டக்களப்பு)

அன்னை பூபதியின் 35 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

இவர் மட்டக்களப்பில், இந்திய அமைதி காக்கும் படைக்கு எதிராக நீரை மட்டுமே அருந்தி, சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்தவர். (நி)

## உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு; பல்கலை விரிவுரையாளர்களுக்கு அழைப்பு

(கொழும்பு)

க.பொ.த. உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு தொடர்பான கலந்துரையாடலுக்கு பரீட்சைத் திணைக்களத்தினால் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக கிட்டத்தட்ட 300 பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் அழைக்கப்பட்டுள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சையின் வினாத்தாள்களும் அது தொடர்பான விடைகளும் பல்கலைக்கழகப் போதனாசிரியர்களால் தொகுக்கப்பட்டுள்ளன. அதன்படி, நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்தையும் உள்ளடக்கும் வகையில் மாணவர்களால் வழங்கப்பட்ட பல விடைத்தாள்கள் தோராயமாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சமர்ப்பித்த விடைகள் மற்றும் உரிய வினாத்தாள்களுக்கு மாணவர்கள் சமர்ப்பித்த விடைத்தாள்கள் பகுப்பாய்வு செய்யப்படும் என பரீட்சை திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதன்பின், அதுகுறித்து ஆலோசிக்கப்பட்டு, தேர்வெழுதிய மாணவர்களுக்கு அநீதி இழைக்காத வகையில் மதிப்பெண்கள் வழங்கும் நடைமுறை தயாரிக்கப்படும். அந்த நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடலுக்கு வருமாறு பல்கலைக்கழக விரிவுரையாளர்களை பரீட்சை திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (நி)

## எதிர்காலத்திலும் இலங்கையில் நிலநடுக்கங்கள் ஏற்படலாம்

### நிலநடுக்கங்கள் குறித்து அச்சம் தேவையில்லை என்கிறது புவியியல் ஆய்வு மையம்

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டிருந்த நிலநடுக்கங்கள் தொடர்பாக மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் அறிவித்துள்ளது.

இலங்கையில் அமைந்துள்ள இந்திய - அவுஸ்திரேலிய தட்டுக்கும் மேலே அமைந்துள்ள ஆசிய தட்டுக்கும் இடையில் நேற்று பிற்பகல் முழுவதும் பல நிலநடுக்கங்கள் உணரப்பட்டிருந்ததாக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் சிரேஷ்ட புவியியலாளர் தனுஸ்க ஹெட்டியாராச்சி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கடந்த 40 வருடங்களின் பின்னர் ரிக்டர் அளவுகோலில் 4 இற்கும் குறைவான அதிர்வுகளே ஏற்பட்டுள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புவியியல் பேராசிரியர் அதுல சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

எனவே பெரிய நிலநடுக்கங்களை எதிர்பார்க்க முடியாது. ஆனால் 2, 2.5, 3, 3.5 போன்ற நிலநடுக்கங்கள் எதிர்காலத்திலும் ஏற்படலாம் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

## பல பிரதேசங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

(பதுளை)

பதுளை, கேகாலை மற்றும் குருநாகல் மாவட்டங்களில் உள்ள பல பிரதேசங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி)

## நுரைச்சோலையின் மின்பிறப்பாக்கி மீண்டும் செயலிழப்பு

### ஆனாலும் மின்வெட்டு அமுல்படுத்தப்படாது என்கிறார் அமைச்சர் காஞ்சன



(கொழும்பு)

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் மூன்றாவது மின் பிறப்பாக்கி மீண்டும் செயலிழந்துள்ளது.

இதன் பராமரிப்புப் பணிகளை எதிர்வரும் ஏப்ரல் மாதம் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டுள்ளார்.

மின்சார சபையிடமுள்ள டீசல் உள்ளிட்ட எரிபொருட்கள் மூலம் மக்களுக்கு தொடர்ச்சியாக மின்சாரத்தை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் எக்காரணத்திற்காகவும் மின்வெட்டு அமுல்படுத்தப்பட மாட்டாது எனவும் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர மேலும் தெரிவித்தார். (நி)

## எல்லை நிர்ணய செயன்முறை மீண்டும் திருத்தப்பட வேண்டும்

### வஜிர எம்.பி

(கொழும்பு)

எல்லை நிர்ணய செயன்முறை மீண்டும் திருத்தப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

சனத்தொகை மற்றும் புவியியல் இருப்பிடத்திற்கு ஏற்ப இந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலியில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர், கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களின் எல்லை நிர்ணய நடவடிக்கை பாரிய அநீதியை இழைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## 2 மில்லியன் கன மீற்றர் கடல் மணலை பெற எதிர்பார்ப்பு

### காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்

(கொழும்பு)

இந்த வருடம் இரண்டு மில்லியன் கனமீற்றர் கடல் மணலை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

தாய்மைப்படுத்தி தேவையான தரத்தில் தயாரிக்கப்பட்ட கடல் மணலின் கனசதுரத்தை பொதுமக்களுக்கு மலிவு விலையில் விற்பனை செய்ய இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

முத்துராஜவெல கடற்கரையிலிருந்து நீர்கொழும்பு வரை 10 முதல் 15 கிலோமீற்றர் தூரத்தில் கடலில் இருந்து மணல் அள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட மீனவ சமூகத்தின் முன்னேற்றத்திற்காக அந்த மீனவ பிரதேசங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பில் கடற்றொழில் மற்றும் நீரியல் வள திணைக்களத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் மேற்கொள்ளுமாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதற்கு முன்னதாக, இது தொடர்பில் அரசியல் அதிகாரிகள், பிரதேசத்தின் மதத் தலைவர்கள் மற்றும் மீனவ சங்கங்களுக்கும் தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (நி)

## பொதுநிர்வாக அமைச்சின் செயலாளருக்கு திடீர் இடமாற்றம்

(கொழும்பு)

பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் நீல் ஹபுஹின்னவுக்கு அரசாங்கத்தினால் திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் அவர் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் பதவியில் இருந்து விடுவிக்கப்பட்டு, உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் ஜனாதிபதி செயலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அங்கு அவருக்கான பதவி நிலை குறித்து இதுவரை தெரிய வரவில்லை.

பொதுநிர்வாக அமைச்சின் பதில் செயலாளராக அதன் தற்போதைய மேலதிக செயலாளர் கே.டி.என் ரஞ்சித் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

எதிர்வரும் வாரம் நடைபெறவுள்ள அமைச்சரவை மாற்றத்தின் பின்னர் பொது நிர்வாக அமைச்சுக்கு புதிய செயலாளர் ஒருவர் நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 131





இந்தப் போரில் எதிரிப் படைகளை அதாஹதம் செய்து தன் வீரப் புகழை நிலைநாட்டிய பிறகு, இராஜாதித்யன் போர்க்களத்தில் உயிர் துறந்து வீர சொர்க்கம் அடைந்தான். இவனும் பல்லவ அபராஜித வர்மனைப் போல் யானை மீதிருந்து போர் புரிந்து யானை மேலிருந்தபடியே இறந்தபடியால், இவனை "ஆனைமேல் துஞ்சிய தேவன்" என்று கல்வெட்டுச் சாசனங்கள் போற்றிப் புகழ்கின்றன.

இராஜாதித்யன் மட்டும் இறந்திராவிட்டால், அவனே பராந்தக சக்கரவர்த்திக்குப் பிறகு சோழ சிம்மாசனம் ஏறியிருக்க வேண்டும். இவனுடைய சந்ததிகளே இவனுக்குப் பின்னர் முறையாகப் பட்டத்துக்கு வந்திருக்க வேண்டும்.

ஆனால் இளவரசன் இராஜாதித்யன் பட்டத்துக்கு வராமலும் சந்ததியில்லாமலும் இறந்துவிடவே, இவனுடைய இளைய சகோதரர் கண்டராதித்த தேவர் தந்தையின் விருப்பத்தின்படி இராஜகேசரி பட்டத்துடன் சிங்காதனம் ஏறினார்.

இவர் தமது தந்தையையும் பாட்டனையும் போலவே சிவபக்தி மிகுந்தவர். அத்துடன் தமிழன்பு மிக்கவர். உண்மையில் இவருக்கு இராஜ்யம் ஆளுவதில் அவ்வளவு சிரத்தையே இருக்கவில்லை. ஆலய வழிபாட்டிலும் தமிழ் இன்பத்திலும் அதிகமாக ஈடுபட்டிருந்தார்.

மகான்களாகிய நாயன்மார்களைப் பின்பற்றிச் சிவபெருமான் மீது துதிப்பாடல்கள் பாடினார். 'திருவிசைப்பா' என்று வழங்கும் இப்பாடல்களில் கடைசிப் பாட்டில் இவர் தம்மைப் பற்றியே பின்வருமாறு சொல்லிக் கொண்டிருக்கிறார்:

"சீரான்மல்கு தில்லைச் செம்
பொன் அம்பலத்தாடி தன்னைக்
காரார் சோலைக்கோழி வேந்
தன் தஞ்சையர்கோன் கலந்த ஆரா
வின் சொற் கண்டராதித்தன்
அருந்தமிழ் மாலை வல்லவர்
பேரா உலகிற் பெருமை யோடும்
பேரின்ப மெய்துவரே!

விஜயாலயனுக்குப் பிற்பட்ட சோழ மன்னர்கள் பழையாறையிலும் தஞ்சையிலும் வசித்தபோதிலும் பூர்வீகச் சோழத் தலைநகர் உறையூர் என்னும் பாத்தியதையை விட்டுவிடவில்லை. உறையூருக்கு இன்னொரு பெயர் கோழி என்பதாகும். ஆகையால் சோழ மன்னர்கள் தங்களைக் "கோழி வேந்தர்" என்று சொல்லிக் கொண்டார்கள்.

கண்டராதித்த தேவர் சிம்மாசனத்திலிருந்து பெயரளவில் அரசு புரிந்தபோதிலும், உண்மையில் அவருடைய இளைய சகோதரனாகிய அரிஞ்சயன் தான் இராஜ்ய விவகாரங்களைக் கவனித்து வந்தான். இராஜாதித்யனுக்குத் துணையாக அரிஞ்சயன் திருநாவலூர் முதலிய இடங்களில் சைன்யங்களுடன் தங்கியிருந்தான். இராஷ்டிர கூடர்களுடன் வீரப் போர் நடத்தினான். தக்கோலத்தில் சோழ சைன்யத்துக்கு நேர்ந்த பெருந் தோல்வியை விரைவிலேயே வெற்றியாக மாற்றிக் கொண்டான். இராஷ்டிரகூடர் படையெடுப்பைத் தென்பெண்ணைக்கு அப்பாலேயே தடுத்து நிறுத்தினான்.

எனவே, இராஜகேசரி கண்டராதித்த சோழர் தம் தம்பி அரிஞ்சயனுக்கு யுவராஜ பட்டம் சூட்டி, அவனே தமக்குப் பின் சோழ சிங்காதனத்துக்கு உரியவன் என்றும் நாடறியத் தெரிவித்து விட்டார்.

இவ்விதம் கண்டராதித்தர் முடிவு செய்ததற்கு இன்னொரு முக்கிய காரணமும் இருந்தது. இவருடைய மூத்த மனைவி இவர் பட்டத்துக்கு வருவதற்கு முன்பே காலமாகி விட்டாள். பிறகு வெகு காலம் கண்டராதித்தர் மணம் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் இவருடைய தம்பி அரிஞ்சயனுக்கோ அழகிலும் அறிவிலும் ஆற்றலிலும் சிறந்த புதல்வன் இருந்தான்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## ஒரே அடியில் இருநூறு பேர்

(நேற்றைய தொடர்ச்சி)

உண்மையை உணராத அந்த முட்டாள் பூதம் அவனை மிகுந்த வலிமையானவன் என்று நினைத்தது. கீழே வா. உனக்கு இன்னும் ஒரு சோதனை, என்றது அது.

எப்படியும் பூதத்தை ஏமாற்றி விடலாம் என்ற எண்ணத்தில் கீழே குதித்தான் அவன்.

தரையில் கிடந்த சிறு கல்லை எடுத்தது அது. என் வலிமையைப் பார், என்று சொல்லி அந்தக் கல்லை உயரே வானத்தை நோக்கி வீசியது. அரை மணி நேரம் கழித்து அந்தக் கல்



கீழே விழுந்தது. எங்கே இதைப் போலச் செய்து உன் வலிமையைக் காட்டு, என்றது பூதம்.

நான் கல்லை மேலே வீசினால் கீழே விழவே விழாது. வான் உலகத்தைக் கிழித்துக் கொண்டு சென்று விடும் என்று பெருமையுடன் சொன்ன அவன் தன் பைக்குள் இருந்த சிட்டுக் குருவியை எடுத்தான். அதை மேலே தூக்கி எறிந்தான். அப்படியே பறந்து சென்றது அது.

பூதம் நீண்ட நேரம் காத்திருந்தது. மேலே எறிந்த கல் கீழே விழவே இல்லையே. இவனிடம் கவனமாக இருக்க வேண்டும். இல்லையேல் என்னைக் கொன்று விடுவான் என்று நினைத்தது அது.

நீ என் விருந்தினன். என் மாளிகைக்கு வா. விருந்து சாப்பிட்டு விட்டுச் செல்லலாம், என்று அன்புடன் அழைத்தது அது.

இருவரும் பூதத்தின் மாளிகையை அடைந்தனர். அந்த மாளிகைகளைச் சுற்றிலும் தோட்டம் இருந்தது.

சமையல் செய்ய விறகு இல்லை. காட்டிற்குச் சென்று சிறிது விறகு கொண்டு வா என்று அவனைப் பார்த்துச் சொன்னது பூதம்.

உடனே அவன், எதற்காக விறகு? நான் அந்தப் பெரிய மரத்தை அப்படியே இழுத்து வருகிறேன் என்றான்.

அந்தப் பெரிய மரத்தைப் பார்த்தது பூதம். அது கீழே விழுந்தால் தன் தோட்டம் பாழாகி விடும். மாளிகைச் சுவரும் இடிந்து விடும் என்று நினைத்தது அது.

பயந்து போன அது நானே சென்று விறகு கொண்டு வருகிறேன் என்று புறப்பட்டது.

சிறிது நேரத்தில் விறகுடன் அங்கே வந்தது அது.

இன்னும் எப்படி எல்லாம் அதை ஏமாற்றலாம் என்று சிந்தித்துக் கொண்டிருந்தான் அவன். பூதம் அவனைப் பார்த்து சமைப்பதற்கு நீர் வேண்டுமே. கிணற்றுக்குச் சென்று இந்தப் பாத்திரத்தில் நீர் கொண்டு வா என்றது. பாத்திரத்தில் நீர் கொண்டு வருவதா எனக்கு எவ்வளவு கேவலம் வலிமையுடைய நான் அந்தக் கிணற்றையே இங்கே இழுத்து வந்து விடுகிறேன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் நல்ல தலைவன் தான் தலைவன் என்பதை வார்த்தைகளால் அல்ல செயலால் உணர்த்துபவனாக இருக்க வேண்டும். - *விவேகானந்தர்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# கடும் விமர்சனங்களின் உள்ளார்ந்தம் யாது?

சமூக வலைத்தளம் என்பது கருத்துருவாக்கத்துக்குக் கிடைத்த பொதுவெளியரங்கு எனலாம்.

தவிர; தனி மனித கற்பனை வளம், எழுத்தாற்றல், சமூக சிந்தனை, மனிதநேயம் எனப் பல்பரிமாணங்களில் கருத்துக்களை முன்வைப்பதற்கும் அதனூடு சமூக நலனைப் பேணுவதற்கும் சமூக வலைத்தளங்கள் களம் அமைத்துக் கொடுக்கின்றன.

எனினும் மேற்கூறிய விடயங்களுக்கு நேர் மாறாக சமூக வலைத்தளங்கள் பயன்படுத்தப்படுவதுதான் வேதனையிலும் வேதனை.

ஆம், எப்படியும் விமர்சிக்கலாம். யாரையும் விமர்சிக்கலாம். எந்த வார்த்தைப் பிரயோகங்களையும் பயன்படுத்தலாம். வன்முறைகளைத் தூண்டலாம். துவேசங்களைப் பரப்பும் வகையில் விமர்சிக்கலாம் என்ற நிலைப்பாட்டில் சமூக வலைத்தளங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

உண்மையில் விமர்சனங்கள் தேவையானவை. விமர்சனங்கள் அறத்தை நிலை நாட்டவல்லவை.

மக்களிடையே ஒற்றுமையைப் பலப்படுத்தக்கூடியவை. முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தவல்லவை என்பதால் விமர்சனங்கள் ஆக்கபூர்வமானவையாக அமைய வேண்டும்.

இதைவிடுத்து மக்கள் பணி செய்கின்ற பண்பாளர்களை பொதுப் பணிக்காகத் தங்கள் வாழ்வை அர்ப்பணித்தவர்களைக் கண்டபாட்டில் விமர்சிக்கும்போது அது அவர்களின் மனங்களை நோகடித்து விடும்.

இவ்வாறு அறப்பணியாளர்களின் மனங்களை நோகடித்து அவர்களின் பணிகளை முடக்க செய்வதென்பது மிகப்பெரும் ஈனத்தனமாகும்.

எனவே விமர்சனங்கள் மற்றும் கருத்துக்களை முன்வைக்கும்போது அங்கு பண்புடைமை நிச்சயம் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

அவ்வாறான விமர்சனங்கள் மற்றவர்களையும் சிந்திக்கத் தூண்டும்.

அதில் இருக்கக்கூடிய நியாயத்துவம் ஆராயப்படும். அதற்கும் மேலாக, குறித்த விமர்சனங்களுக்கு உரிய பதிலும் வழங்கப்படும்.

இதைவிடுத்து மோசமான வார்த்தைப் பிரயோகங்களுடன் விமர்சனங்கள் முன்வைக்கப்படுமாயின், அதன் உள்ளார்ந்தம் பகையையும் வன்மத்தையும் தூண்டுமேயன்றி, அதற்குள் சமூக நலனோ அன்றி இனத்துவ நல்னோ இருப்பதாகக் கருத முடியாது.

ஆகையால் ஆக்கபூர்வமான விமர்சனங்களை முன்வைக்கின்ற கலாசாரத்தை உருவாக்க வேண்டும்.

இதைச் செய்யாதவிடத்து நம் தமிழ் மண்ணில் தரமானவர்கள், வல்லவர்கள், நல்லவர்கள், அறப்பணியாளர்கள் தங்கள் பணிகளில் இருந்து ஒதுங்கி விடுவர்.

அதன் பின்னர் அவலமும் துன்பமுமே இங்கு எஞ்சியிருக்கும். கவனம்.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் விரைவில் சபையில் சமர்ப்பிப்பு

## நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை வர்த்தமானியில் வெளியிட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

புதிய சட்டம் உத்தியோகபூர்வ மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு ஏப்ரல் தொடக்கத்தில் வர்த்தமானியாக வெளியிடப்படும் என்றும் அதன் பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் கூறினார்.

சந்தேக நபர்களை தன்னிச்சையாக காவலில் வைப்பதற்காக பயங்கரவாத தடைச் சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக கடந்த மூன்று தசாப்தங்களாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

கடந்த சில வருடங்களாக, பயங்கரவாத தடைச் சட்டத்தை மாற்றியமைப்பதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள்பேரவை மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திடம் இலங்கை உறுதியளித்துள்ளது.

வலுவான இராஜதந்திர அழுத்தத்தைத் தொடர்ந்து, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை கடந்த ஆண்டு மீளாய்வு செய்த அரசாங்கம் பல வருடங்களாக சிறையில் இருந்தவர்களையும் விடுவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

# நாட்டின் அனைத்து அரச இயந்திரங்களும் செயலிழப்பு

## எதிர்க் கட்சி தலைவர் சஜித்

ஒரு நாட்டை இயக்குவதற்கான அனைத்து இயந்திரங்களும் இயங்காத நிலையில், நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வழிமுறைகள் என்ன என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

முறையான வேலைத் திட்டத்தின் மூலமே வங்குரோத்தடைந்த நாட்டை கட்டியெழுப்ப முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கொலன்னாவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாடு முழுவதும் கடுமையான அசாதாரண நிலைமை ஏற்பட்ட போது நாட்டின் அதிகாரத்தை பொறுப்பேற்ற முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச, ஜனசவிய போன்ற பொது நலத் திட்டங்களையும் ஆடைத் தொழிற்சாலைகள் போன்ற அபிவிருத்தித் திட்டங்களையும் ஆரம்பித்தார்.

சர்வதேச நாணய நிதியமோ அல்லது வேறு எந்த தரப்புமோ ஜனசவிய போன்றவற்றை குறைப்புச் செய்யுமாறு எதுவும் கோரப்படவில்லை.

நாற்பத்து மூன்று இலட்சம் பிள்ளைகளுக்குக் கொடுத்த மதிய உணவை குறைக்குமாறு கோரவில்லை. சீருடைகளை வழங்குவதை தடை செய்யுமாறு கோரவில்லை.

சர்வதேச நாணய நிதியத்துடனான சரியான பேச்சுவார்த்தைகளே அதற்கு காரணம். இன்று அது முறையாக நடக்காதது தான் காரணம்.

மேலும், மக்களால் தாங்க முடியாத அளவுக்கு மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த எதேச்சதிகார ஆட்சிக்கு எதிராக மின் கட்டணத்தை செலுத்தாத நிலைக்கு செல்ல வேண்டும் என்றார். (ம-7,9)

# புதையல் தோண்ட முற்பட்ட நால்வர் முல்லையில் கைது

முல்லைத்தீவு புதுமாத்தளன் பகுதியில் புதையல் தோண்ட முற்பட்ட நால்வரை முல்லைத்தீவு பொலிஸார் கைது செய்துள்ளனர். நேற்று முன்தினம் இரவு இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

புதுமாத்தளன் கடற்கரையினை அண்டிய பகுதியில் நால்வர் நிலத்தினை தோண்டிக்கொண்டிருந்த வேளை இராணுவ புலனாய்வாளர்களுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய முல்லைத்தீவு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து சம்பவ இடத்திற்கு சென்ற முல்லைத்தீவு பொலிஸார் நால்வரையும் கைதுசெய்துள்ளதுடன் தோண்டுவதற்காக பயன்படுத்தப்பட்ட மண்வெட்டி மற்றும் சவல் என்பனவற்றையும் மீட்டுள்ளார்கள்.

மேலும், யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி முழங்காவில் மற்றும் தென்பகுதியினை சேர்ந்த ஓய்வுபெற்ற படைவீரர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் விசாரணை மேற்கொண்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கையில் முல்லை த்தீவு பொலிஸார் ஈடு பட்டுள்ளார்கள். (ம-7,9)

# பேராதனை பல்கலையில் கட்டித் தழுவ தடையில்லை

பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்தில் காதல் செய்வதும் கட்டித் தழுவுவதும் தடைசெய்யப்பட்டதல்ல, ஆனால் அளவுக்கு மீறிய செயற்பாடுகள் அனுமதிக்கப்பட மாட்டாது என பேராதனை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் டி.எம். லமாவன்ச வலியுறுத்தினார்.

அண்மையில் பேராதனை பல்கலைக்கழகத்தின் செனட் கட்டடத்துக்கு அருகில் காதலர்கள் இருவர் கட்டித் தழுவியபடி நின்றிருந்த சம்பவம் தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகத்தின் நடவடிக்கை குறித்து சமூக ஊடகங்களில் விமர்சனங்கள் எழுந்துள்ளதை தொடர்ந்தும் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக வளாகத்தில் 1,700 ஏக்கர் நிலப்பரப்பில் 13,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்பதாகவும், அவர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை எந்த வகையிலும் கட்டுப்படுத்தப் போவதில்லை என்றும் துணைவேந்தர் கூறியுள்ளார்.

மேலும், பல்கலைக் கழக வளாகத்தில் கட்டித்தழுவுவது தடைசெய்யப்படவில்லை, எனினும் பல்கலைக்கழகத்துக்கு பார்வையாளர்களாக வருகை தரும், மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் கல்விச் சுற்றுலா வரும் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்டவர்களுக்கு சங்கடத்தை ஏற்படுத்தாதவாறு பல்கலைக்கழக மாணவர்கள் தங்களின் வரம்புகளை அறிந்து செயற்பட வேண்டும் என்றும் துணைவேந்தர் மேலும் கூறினார் (ம-7,9)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை **யாழ். பிரதேசத்தில்** கே.எம்.கே. கடல் உணவு (பிரைவேட்) லிமிடெட், காளி [illegible] நாவற்குழி லிங்ஷ் ரெடிமிக்ஸ், அறுகுவெளி, ஐயனார் கோவிலடி, நாவற்குழி, கோகிலாகண்டி மங்களா பட்டறை, கோகிலாகண்டித்துறை, மறவன்புலவு, மறவன் புலவு கேரைதீவு வீதி, மற வன்புலவு மத்தி, நாவற்குழி கேரைதீவு வீதி, தச்சந்தோப்பு கேரைதீவு வீதி, தனங்கிளப்பு ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** சிதம்பரபுரத்திலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாலை நேர இலவசக்கல்வி நிலையம் வண்ணாங்கேணி வடக்கில் திறந்து வைப்பு



(தருமபுரம்)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட வண்ணாங்கேணி வடக்கு கிராமத்தில் நேற்று மாலை நேர இலவச கல்வி நிலைம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

உதவும் இதயங்கள் நிறுவனத்தினால் (ஜேர்மனி) நேற்று வண்ணாங்கேணி வடக்கு கிராம பொது நோக்கு மண்டபத்தில் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் பளை பொலிஸ் பொறுப்பதிகாரி , வண்ணாங்கேணி வடக்கு, மற்றும் வண்ணாங்கேணி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் நிதி அனுசரணையாளர்கள் கவிஞர் ரஜீவன் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். (நி-316)

## தமிழரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் நேற்று மன்னாரில் ஆரம்பம்




(மன்னார்)

இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் நேற்று ஞாயிற்றுக் கிழமை 10.30 மணியளவில் மன்னாரில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் ஆரம்பமானது. (நி-285)

# மின்கட்டண அதிகரிப்பால் கைவிடப்பட்ட சுயதொழில் முயற்சிகள்

## தீர்வினைப் பெற்றுத் தருமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளில் சேதன உர உற்பத்தி நிலையம், தும்புத் தொழிற்சாலைகள் பல இலட்சம் ரூபாய் செலவில் கடந்த அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டது. தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள மின்கட்டண அதிகரிப்பு காரணமாக அந்தத் தொழில்களை செய்ய முடியாத நிலை தோன்றியுள்ளது.

இதனால் சேதன உரம் உற்பத்தி நிலையங்கள் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

பல இலட்சக்கணக்கான பெறுமதியினைக் கொண்ட இயந்திரங்களைப் பெற்றும் அந்த இயந்திரங்களைக் கூட பராமரிக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் ஒரு தீர்வினைப் பெற்றுத் தர வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-316)

# வான்- மோ.சைக்கிள் மோதி விபத்து

## தந்தையும் மகனும் உயிரிழப்பு

(சீதுவ)

வான்- மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியதில் தந்தையும், மகனும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சோக சம்பவம் சீதுவ - கொடுகொட வீதியில் பஞ்சானந்தா வித்தியாலயத்துக்கு அருகில் நேற்று இடம் பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 45 வயதுடைய தந்தையும், 14 வயது மகனும் உயிரிழந்துள்ளனர்.

விபத்து தொடர்பில் வான் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (நி)

# வவுனியாவில் 3 வீடுகளில் தொடர் திருட்டு சம்பவம்

## சகோதரர்கள் இருவர் மீதும் திருடர்கள் தாக்குதல்

(வவுனியா)

வவுனியா கள்ளிக்குளம் கிராமத்திற்குள் நேற்று முன்தினம் இரவு புகுந்த திருடர்கள் நேற்று அதிகாலை மூன்று மணிவரையிலும் மூன்று வீடுகளில் திருட்டில் ஈடுபட்டுள்ளனர்.

இச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது கள்ளிக்குளம் கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் வயோதிபர் வசிக்கும் வீடு ஒன்றிற்குள் உருமறைப்புச் செய்து கொண்டு உள் நுழைந்த திருடர்கள் சிலர் காதில் அணிந்திருந்த தோட்டை கழற்றித் தருமாறு அச்சுறுத்தி பறித்துக் கொண்டு அருகில் இருந்த வீட்டிற்குள் குறித்த வயோதிபரையும் அழைத்துக் கொண்டு அவரின் குரலில் வீட்டில் வசித்தவர்களை அழைத்துள்ளனர்.

கதவைத் திறந்தபோது அவ்வீட்டிற்குள் புகுந்த திருடர்கள் அவர்கள் அணிந்திருந்த ஐந்து பவுன் தங்க நகைகளையும் பதினெட்டாயிரம் ரூபாய் பணம் என்பனவற்றையும் அங்கு திருடிக்கொண்டு பின்பு சற்றுத் தொலைவிலுள்ள வீடு ஒன்றிற்குள் புகுந்து அங்கிருந்த இரு சகோதரர்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டு அவர்களின் வீட்டிலும் திருடிக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

காயமடைந்த இருவரும் வவுனியா பொது மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மூன்று வீடுகளிலும் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்தின்போது திருடப்பட்ட தங்க நகைகளின் விபரம் சரியாக மதிப்பீடு செய்யப்படவில்லை.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாமடு பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-299)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 150 | 120 | 140 | 200 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 | 150 | 160 |
| பச்சைமிளகாய் | 350 | 340 | 330 | 320 |
| தக்காளி | 200 | 120 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 160 | 200 | 200 |
| கோவா | 80 | 80 | 80 | 100 |
| கரட் | 100 | 180 | 140-200 | 200 |
| பூசணி | 80 | 80 | 40 | 60 |
| புடோல் | 180 | 160 | 170 | 160 |
| வாழைக்காய் | 160 | 150 | 120 | 140 |
| சின்ன வெங்காயம் | 280 | 280 | 100-300 | 300 |
| பெரிய வெங்காயம் | 150 | 140 | 120 | 150 |
| பாகற்காய் | 400 | 600 | 500 | 500 |
| வெண்டக்காய் | 200 | 280 | 220 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 110 | 80 | 150 |
| பயற்றங்காய் | 200 | 200 | 200 | 250 |
| லீக்ஸ் | 250 | 240 | 240 | 300 |
| பீற்றூட் | 140 | 150 | 170 | 200 |
| கறிமிளகாய் | 350 | 300 | 280 | 250 |
| முருங்கைக்காய் | 1800 | 1900 | 1000 | 2000 |
| போஞ்சி | 250 | 250 | 250 | 300 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 200 | 150 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 40-90 | 80-110 |
| இராசவள்ளி | 300 | 350 | 300 | 350 |
| வெங்காயப்பூ | 150 | 120 | -- | 300 |
| முள்ளங்கி | 80 | 80 | 80 | 160 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 40 | 140 | 40 | 60 |
| ஈரப்பலா | 100 | 150 | -- | 120 |

# பெரியவிளானில் சங்கிலி அறுப்பு

## ஒருவர் பொலிஸாரால் கைது

(அராலி)

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெரியவிளான் சந்தியில் நின்ற பெண் ஒருவரது தங்கச் சங்கிலி அறுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் குறித்த பெண் வீதியில் நின்ற வேளை அவ்வழியால் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பெண்ணின் சங்கிலியை அறுத்துக் கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தீவிர விசாரணைகளை மேற்கொண்ட இளவாலை பொலிஸார் மூளாய் பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர் ஒருவரை மோட்டார் சைக்கிளுடன் நேற்று கைது செய்துள்ளனர்.

அவரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை...

இந்திய எல்லைக்குள் சென்றமையால் அவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட் ட னர். (ம-7,9,104)

## உள்ளூராட்சி தேர்...

மன்றத் தேர்தல் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர் மேலும் கூறுகையில்,

தேர்தலை நடத்துவது தேர்தல்கள் ஆணைக்குழுவின் கடமையாக இருந் தாலும், அதற்கு சகல நிறுவனங்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

ஆனால், தற்போது அரச நிறு வனங்களின் ஒத்துழைப்பு சிக்கலாக காணப்படுகிறது. அனைத்து செயற் பாடுகளையும் ஆணைக்குழு அவ தானித்து வருகிறது.

சுயாதீனம் என்பதற்காக ஆணைக் குழுவினால் தனித்து தேர்தலை நடத்த முடியாது. தேர்தலை நடத்த சகல தரப் பினரின் ஒத்துழைப்பு அத்தியாவசிய மானது.

தேர்தல் நடவடிக்கைகளுக்கு நடை முறையில் தோற்றம் பெற்றுள்ள பிரச் சினைகளுக்கு தீர்வு காண்பது குறித்து எதிர் வரும் வியாழக்கிழமை சகல அரசியல் கட்சி செயலாளர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளோம்.

அரசியல் கட்சி செயலாளர்களுட னான பேச்சுவார்த்தையை தொடர்ந்து உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர் பில் ஒரு உத்தியோகபூர்வ அறிவிப்பு விடுக்கப்படும் என்றார். (ம-7,9)

## குளத்திலிருந்து...

மக்கள் அது தொடர்பாக பொலிஸா ருக்கு தெரிவித்திருந்தனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலி ஸார் சடலத்தை மீட்டுள்ளதுடன், விசா ரணைகளை முன்னெடுத்து வருகின் றனர்.

குறித்த சடலத்தில் இருந்து துர் நாற்றம் வீசிவருவதால் ஒரு சில நாட் களுக்கு முன்னரே அவர் இறந்திருக்க லாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது..

குறித்த சடலம் யாருடையது என இதுவரை இனங்காணப்படவில்லை. (ம-7,9,250)

## அதிக வெப்பம்...

தசைப்பிடிப்பு, அதிக சோர்வு மற்றும் பக்கவாதம் ஏற்படக்கூடும் என சுகா தார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, அதிக வெப்பநிலை யுடனான நாட்களில் பாடசாலை மாண வர்கள் விளையாட்டு நடவடிக்கை களில் ஈடுபடுவதை தவிர்க்குமாறும், இடைவேளை நேரங்களில், மாணவர் கள் அதிக வெப்ப காலநிலையில், வெளி நடவடிக்கைகளில் ஈடுபட வேண் டாம் எனவும் கோரப்பட்டுள்ளது.

அத்துடன், அதிக குடிநீரை அருந்த வும், அதிக சோர்வு நிலையை போக்க இரண்டு சிறு ஓய்வு காலங்களை, வழங்குவது சிறந்தது என பரிந்துரைக் கப்பட்டுள்ளது.

அதிக வெப்பநிலையுடனான நாட் களில், இல்ல விளையாட்டு போட்டி களை நடத்துவதை தவிர்க்குமாறு சுகா தார அமைச்சினால், கல்வி அமைச் சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,9)

## உள்ளூராட்சி...

340 உள்ளூராட்சி நிறுவனங்களின் உத்தியோகபூர்வ காலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவுடன் நிறை வடைந்துள்ள நிலையில் அந்த நிறு வனங்களின் எதிர்கால செயற்பாடுகள் குறித்து பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் ஆளுநர்களுக்கு இடையில் கலந் துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது

ஆளுநர்களான டிக்கிரி கொப்பே கடுவ (சப்ரகமுவ), வசந்த கர்ணகொட (வடமேற்கு), எம்.ஜே.எம்.முசம்மில் (ஊவா), மஹீபால ஹேரத் (வடமத் திய), வில்லி கமகே (தெற்கு), லலித் யூ. கமகே (மத்திய), அனுராதா யஹம்பத் (கிழக்கு), ரொஷான் குணதிலக்க. மேற்கு), ஜீவன் தியாகராஜா (வடக்கு) ஆகியோர் குறித்த கலந்துரையாடலில் பங்குபற்றினர். (ம-7,9,104)

## பாராளுமன்றம்...

பாற்பட்ட வகையில் செயற்படுகிறார் என மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் காரியாலயத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து ரைக்கையில் மேற்கண்டவாறு குறிப் பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், 340 உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவுடன் நிறைவு பெற்றது. மாகாண சபைகளை போல் உள்ளூராட்சி மன் றங்களும் தற்போது மக்கள் பிரதிநிதி கள் இல்லாத நிர்வாக கட்டமைப் புக்குள் உள்வாங்கப்பட்டுள்ளது.

நிதி நெருக்கடி என்ற தர்க்கத்தை முன்வைத்துக் கொண்டு அரசாங்கம் தேர்தல் செயற்பாடுகளுக்கு பாரிய தடைகளை ஏற்படுத்தி வருகிறது. பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்ட நிதியை நிதியமைச்சர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுவிக்காமல் உயர் நீதிமன்றத்தின் இடைக்கால தடையுத்தரவை மதிக்காமல் செயற் படுகிறார்.

உயர்நீதிமன்ற நீதிபதிகளை பாராளுமன்ற ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமை தொடர்பான குழுவுக்கு அமைக்க ஆளும் தரப்பு அவதானம் செலுத்தியுள்ளது. நீதிபதிகளை விசா ரணைக்கு உட்படுத்தும் அதிகாரம் பாராளுமன்ற சிறப்புரிமை குழுவுக்கு கிடையாது. நீதிமன்றத்தை மலினப் படுத்தும் செயற்பாடுகள் பாரிய எதிர் விளைவுகளை ஏற்படுத்தும்.

நீதித்துறையின் சுயாதீனத்தன் மையை பாதுகாக்க நாட்டு மக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்கு வார்கள், நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை நீதிபதிகள் பாதுகாப் பார்கள் என்ற நம் பிக்கை உள்ளது என்றார். (ம-7,9)

## பெண்...

வருவதாவது,

உயிரிழந்த வரின் மகன் வெளிநாட்டில் வசித்து வரும் நிலையில் காணி வாங்குவதற்காக பணத்தை இலங் கையில் உள்ள தந்தைக்கு அனு ப்பி உள்ளார். அப்பணத்தில் ஒரு கோடி ரூபாய் பணத்தை தந்தையார் பெண் ஒருவருக்கு வழங்கியுள்ளார்.

ஆனால் அந் தப் பெண் ஒரு கோடி ரூபாய் பணத்தை திருப்பி வழங்க மறுப்பு தெரிவித்த நிலையில் இரண்டு தடவை அதிக அளவு மாத்திரைகளை உட்கொண்டு தற் கொலைக்கு முயன்ற நிலை யில் யாழ் போதனா வைத்தியசாலை யில் சிகிச்சைக் காக அனுமதிக் கப்பட்டு காப் பாற்றப்பட்டார். 3 ஆவது தடவை கடலுக்குள் பாய் ந்து தற்கொலை செய்ய முற்பட்ட சமயம் மீனவர் களினால் காப் பாற்றப்பட்டார். இச்சம்பவங்கள் ஒரு மாதத்துக் குள் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று ஞாயிற்றுக் கிழமை அதிகாலை பெற்றோல் ஊற்றி தனக்குத்தானே தீ மூட்டி நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் பிற்பகல் 3.00 மணியளவில் உயிரிழந்துள்ளார். இம் மரணம் தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் மரண விசா ரணை அதிகாரி நமசிவாயம் பிரேம குமார் விசாரணைகளை மேற்கொண் டார். (ம-7,60)

## பதின்ம வயது...

பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டை பதிவு செய்த பொலி ஸார், பாதிக்கப்பட்ட சிறுமியை மருத் துவமனையில் சேர்ப்பிக்குமாறு கூறி சிறு மியை தாயாருடன் அனுப்பியுள்ளனர்.

நேற்றிரவு 8 மணிவரை சிறுமி யாழ்ப் பாணம் போதனா மருத்துவனையிலோ அல்லது தெல்லிப்பழை ஆதார மருத்துமனையிலோ அனுமதிக்கப்பட வில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப் பாணம் பிராந்திய அலுவலகத்திற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சிறுமியை உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் முற் படுத்த அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு பணிக்கப்பட்டுள் ளது என்று தெரியவருகின்றது. (ம-7,33)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 19/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1519
வெற்றி இலக்கங்கள்
தனுசு 6 5 6 0 5 5
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.03.19
சீட்டிழுப்பு இலக்கம் - 1094
H 02 48 61 72
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.03.19
சீட்டிழுப்பு இலக்கம் 3306
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
D 20 21 32 33
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 19/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1412
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
O 21 06 24 36 72

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.03.19
சீட்டிழுப்பு இலக்கம் 373
கடகம் 35 50 60 61 கடகம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/03/19
சீட்டிழுப்பு இலக்கம் 5064
X 0 1 9 4 6 2
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2039
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.03.19
தினம் ஞாயிற்றுக்கிழமை
J 06 27 43 66
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,033,600/-
DLB

சனிதா
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.03.19
சீட்டிழுப்பு இல : 4200
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,595,880/-
வெற்றி இலக்கங்கள்
13 20 27 71 N
DLB

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 302
சீட்டிழுப்பு திகதி 2023.03.19
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 26 38 47
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,403,140/-
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,281,838/-
திகதி 2023-03-19
வெற்றி வாரம் 3751
வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் 05 24 25 31
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,104,420/-
DLB

ஜய
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 37 11 21 37 77
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 314,716,732.20
1215
2023.03.19
ஞாயிற்றுக்கிழமை
தொலைபேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
DLB

அத கோடிபதி
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1865
சீட்டிழுப்பு திகதி : 2023.03.19
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,100,820/-
வெற்றி இலக்கங்கள்
23 25 40 75 O
DLB


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விமான ரிக்கெட்டுக்களின் விலை மேலும் குறைவடைகின்றது


டொலரின் விலையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சிக்கு ஏற்ப விமான ரிக்கெட்டுக்களின் விலையும் 20 வீதத்தால் குறைந்துள்ளதாக துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இயங்கும் விமான சேவை நிறுவனங்களின் பிரதி நிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

டொலர் விலை குறைவினால் விமான ரிக்கெட்டுகளின் விலையை குறைக்குமாறு இலங்கையில் உள்ள விமான நிறுவன பிர்திநிதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும், எதிர்காலத்தில் விமான ரிக்கெட்டுகளின் விலைகளை மேலும் குறைப்பதாக அவர்கள் உறுதியளித்துள்ள தாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி படிப்படியாக குறைவடைந்துள்ள நிலையில் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவதற்கான போக்கு காணப்படுவதாகவும், அதற்கமைவாக சுமார் 7 புதிய விமான சேவைகள் இலங்கைக்கு வரவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ம-7,9)

# திருநெல்வேலி சந்தியில் மணிக்கூட்டுடன் இணைந்த அலங்கார தூபி திறப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலி சந்தியில் மணிக்கூட்டுடன் இணைந்த அலங்கார தூபி நேற்றைய தினம் திருநெல்வேலி வர்த்தகர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த தூபி நல்லூர் பிரதேச சபை தவிசாளர் பத்மநாபன் மயூரன் அவர்களின் திட்டத்தில் அவரது காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

நல்லூர் பிரதேச சபை மற்றும் திருநெல்வேலி வர்த்தகர்களின் நிதி பங்களிப்பில் மணிக்கூட்டுடன் இணைந்த அலங்கார தூபி திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-7,9,33,104)


நீங்கள் கடுமையான இருமல், சளி மற்றும் இளைப்பினால் அவதிப்படுகின்றீர்களா?

இன்றே பாவியுங்கள்.

சித்தாரா துளசி அசமோதகம் பாணி

ஆதிகால தேசிய ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இந்த அற்புத பாணி நுரையீரல், சுவாச நாளங்களில் இருக்கும் சளியைப் போக்குவதுடன் இருமல், சளி, இளைப்பு, வாய்வு, அஜீரணம் போன்ற நோய்களிற்கு உடன் நிவாரணம் வழங்கும்.

யாழ். குடா நாட்டின் அனைத்து பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

சந்தைப்படுத்துவோர் : சிவா நறுமணப் பூங்கா ®

இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பேசி : 021 222 2567

(குறிப்பு : சத்திரச்சந்திக்கு அண்மையில்)

Manufactured By:
SITHARA SIDDHAYURVEDA PHARMACY.

(C-6189)


## போலி முத்துக்களுடன் முல்லையில் ஒருவர் கைது

தங்கமுலாம் பூசப்பட்ட போலி முத்துக்களை 'விற்பனை செய்யமுயன்ற குற்றச்சாட்டின் கீழ் ஒருவர் முல்லைத்தீவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜனகபுரம் வெலி ஓயாவினை சேர்ந்த 54 வயதுடைய சந்தேகநபரே இவ்வாறு நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

போலி தங்கமுலாம் பூசப்பட்ட 1400 முத்து மணிகளை அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக முல்லைத்தீவு நகரப் பகுதிக்கு வந்துள்ளார். இந்த நிலையில் குறித்த சந்தேகநபரை கைது செய்த முல்லைத்தீவு பொலிஸார் போலி முத்துக்களை மீட்டுள்ளனர். (ம-7,9)


காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தாவடியில் 3 பரப்பு காணி விற்பனைக்கு

- மூன்று பரப்புக்காணி
- KKS வீதியில் இருந்து இரண்டாவது காணி
- தாவடி சந்தியில் இருந்து 100 m தூரத்தில்

(14961)

076 755 8606 | 076 436 5814


## நாடு மீளமுடியா...

களுத்துறை விமானப்படை தளத்தில் சாரதிகளுக்கான தொழில்நுட்ப நடைமுறை பயிற்சிகளை வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

கடனை அடைக்க முடியாத நாடாக இலங்கை மாறியுள்ளதாகவும் தற்போது இலங்கைக்கு எதிராக உலகமே வழக்கு தொடரும் நிலை வந்துள்ளது.

சுதந்திரத்திற்குப் பின்னர் குறிப்பாக 77க்குப் பின்னர், நாம் உலகத்திலிருந்து கடன் வாங்கினோம்.

அவர்களால் பணம் செலுத்த முடியாத நிலையில், பணம் அச்சிடப்பட்டது. இது தொடர்ந்து செய்யப்பட்டது. எனவே, இதற்கு ஒருவர் பொறுப் பேற்க முடியாது.

அதனால்தான் இந்தப் படுகுழியில் இருந்து வெளிவருவதற்கு உதவுமாறு உலகத்திடம் கேட்டோம் இலங்கை மீண்டெழ வேண்டுமானால் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவி இலங்கைக்கு தேவை என பந்துல குணவர்தன தெரிவித்தார். (ம-7,9)


சேவை நலன் பாராட்டு



எமது பாடசாலையில் ஆரம்பக் கல்வியினை இனிதே கற்பித்து இன்று 20.03.2023 ஓய்வுபெறும் ஆசிரியை

செல்வி டயனேஸ்வரி மார்க்கண்டு

அவர்களது பணியினை பாராட்டுவதோடு அவரது ஓய்வுகாலம் சிறக்கவும் வாழ்த்துகிறோம்.

சேவை விபரம்

03.01.2000 தொடக்கம் 31.12.2000 வரை
யா/ உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை
03.01.2001 தொடக்கம் 13.06.2001 வரை
யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்
14.06.2001 தொடக்கம் 31.06.2003 வரை
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
01.07.2003 தொடக்கம் 31.12.2010 வரை
யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்
03.01.2011 தொடக்கம் 13.02.2013 வரை
கிளி/ உமையாள்புரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை
14.02.2013 தொடக்கம் 20.03.2023 வரை
யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்

Best Wishes!

(14957)

வாழ்த்துவோர் -
அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா பணியாளர், மாணவர்கள்
யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்



வங்கியில் அட்கு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம்., கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி,. சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (14953)

076 825 7716 (ஆகாஸ்)



காணி விற்பனைக்கு

யாழ்பாணம், இருபாலை கிழக்கு, விதானையார் வீதியில் (கற்பகப் பிள்ளையார் கோவில் முன்)
4 பரப்பு காணி உடனடி விற்பனைக்கு உண்டு.

- நிலப்பரப்பு
- பருத்தித்துறை வீதியல் இருந்து 450m
- வெட்டுக்கிணறு
- குடியிருப்பு பகுதி
- 15 தென்னை உட்பட பயன்தரு மரங்கள்

1 பரப்பு 30 இலட்சம் (பேசித் தீர்மானிக்கலாம்)

(14959)

076 766 1032



உதவிக்கு ஆள் தேவை

சாவகச்சேரிப் பகுதியில் வயோதிப பெண் ஒருவருடன் தங்கி இருந்து உதவி புரிவதற்கு பெண் உதவியாளர் தேவை.

(14948)

077 615 3666



உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER

- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-6193)

V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்

0777-068-777



வேலை வாய்ப்பு

விளம்பர நடிகை

நல்ல பேச்சுத் திறமையுடையவராக இருக்க வேண்டும்.

தொடர்புகளுக்கு

(14962)

077 996 9661



உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர், பண்டத்தரிப்பு, சங்கானை, கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

(C-6193)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.